# பாட்டாளி சிந்தனை

Volume 23 No. 12

August 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களை நினைவுகூர்வோம்!



28 நவம்பர் 1820 – 5 ஆகஸ்ட் 1895
பிரெட்ரிக் எங்கெல்ஸ்



5 ஆகஸ்ட் 1923 – 5 ஆகஸ்ட் 1976
சிப்தாஸ் கோஷ்

## குற்றம் நிருபணமானவர்கள், குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலோ போலீஸ் காவலிலோ உள்ளவர்கள் சட்டமன்ற, பாராளுமன்ற பதவியில் நீடிக்கவும் தேர்தலில் போட்டியிடவும் தடைவிதித்து உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் குறித்து

சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக தொடர்வது உறுப்பினர் தகுதி பற்றியும் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தகுதி நீக்கம் பற்றிய புதிய நிபந்தனையை ஆணையிட்டும் கடந்த ஜூலை 10 மற்றும் 11ம் தேதிகளில் உச்சநீதிமன்றம் வழங்கிய முக்கிய தீர்ப்புகளை வழங்கியது. இது குறித்து சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)ன் மத்திய கமிட்டி 14.07.2013 அன்று கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சட்டப்பேரவைகளிலும் நாடாளுமன்றத்திலும் குற்றவாளிகள் நுழைவதை தடுப்பதன் மூலம் இந்திய அரசியல் அமைவுமுறையை தூய்மைபடுத்த கடந்த 10.7.2013 அன்று உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ள தீர்ப்பில் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்ற சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தருணத்திலேயே உறுப்பினர் அந்தஸ்தை இழப்பார்கள் என்றும் மக்கள் பிரதிநிதித்துவ சட்ட பிரிவு 8(4) சட்ட அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று அந்த விதியையே நீக்கியுள்ளது பற்றியும் எஸ்யுசிஐ. (கம்யூனிஸ்ட்)ன் மத்திய கமிட்டி மிகக் கவனத்துடன் நோக்குகிறது. இந்திய தேர்தல் களத்தில் குற்றவாளிகள் நுழைவதை தடுக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் அக்கறையை கட்சியின் மத்திய கமிட்டி முழுமையாக அங்கீகரிக்கும் அதே வேளையில் அரசாங்கங்களை நடத்துகின்ற பெரிய அரசியல் கட்சிகளால்தான் தண்டிக்கப்பட்ட மற்றும் ஆபத்தான குற்றவாளிகள் போஷிக்கப்பட்டு சட்டமன்றம் பாராளுமன்றங்களில் நுழைவதற்கு நேரடியாக வழிசெய்யப்படுகின்றன என்ற உண்மையை சுட்டிக்காட்ட வேண்டியது தனது கடமையாக எமது கட்சி கருதுகிறது. பணபலம், ஆள்பலத்தின் துணையுடனும் வாக்காளர்களை அச்சுறுத்தியும் எத்தகைய தகிடுதத்தம் செய்தாகிலும் மேலும் அதிக தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்ற மூர்க்கத்தனமான வெறியில் இப்பெரிய கட்சிகள் இத்தகைய குற்றவாளிகளை அமைச்சர் களாகவும்கூட நியமிக்கின்றன.

ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் தங்களை அர்ப்பணித்துள்ள போராட்ட உணர்வு கொண்ட நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான வர்கள் மீது பொய் வழக்குகளை ஜோடித்து சிக்க வைத்தும் அவர்களுக்கு ஆயுள் தண்டனை உட்பட நீண்டகால தண்டனைகள் வழங்கியும், அதற்காக எத்தகைய ஒழுங்கீனமான செயல்களிலும் ஈடுபட்டும் உழைக்கும் மக்களின் போராட்டங்களில் புடம் போடப்பட்ட பிரதிநிதிகள் தேர்தலில் போட்டியிடு வதிலிருந்து தடுப்பதன்மூலம் உழைக்கும் மக்களின் நியாயமான ஜனநாயக போராட்டங்கள் ஒடுக்கி அழிக்கப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டுவதை தனது கடமையாக கட்சியின் மத்திய கமிட்டி கருதுகிறது.

மறுபுறம், அனைத்து பெரிய முதலாளித்துவ கட்சிகள் மற்றும் குட்டி முதலாளித்துவ கட்சிகளின் தில்லுமுல்லு சூழ்ச்சியும் நிறைந்த செயல்களால்தான் அரசியலில் கிரிமினல்மயம் என்ற இக்கொடிய பிரச்சினை உருவெடுத்துள்ளது என்பது தெள்ளத்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## ஆந்திரப்பிரதேச மாநிலத்தை பிரிக்கும் பாதகமான முடிவை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எதிர்க்கிறது

*எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் ஆகஸ்ட் 2013 அன்று விடுத்த செய்தி :*

1950களில் 'விஷால் ஆந்திரப்பிரதேசம்' என்ற சக்திவாய்ந்த இயக்கத்தால் உருவான ஆந்திரப்பிரதேச மாநிலத்தை இரண்டாக பிளக்கும் காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு. கூட்டணி அரசாங்கத்தின் சமீபத்திய மிகவும் நியாயமற்ற தன்னிச்சையான முடிவை நாம் வன்மையாக எதிர்க்கிறோம். இது தேவை யற்றதும் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்துவதும் ஆகும். இது இம்மாநில மக்களிடையே ஆழமான பிளவை வேண்டுமென்றே தூண்டிவிடும் செய லாகும். சுதந்திரத்திற்குப் பிறகு பழைய மாநிலங் களிலிருந்து பிளவுபட்டு புதிய மாநிலங்கள் உருவானதாலும் சமீபத்தில் ஜார்க்கண்ட் சத்தீஷ்கர், உத்தரகாண்ட் ஆகிய புதிய மாநிலங்கள் தோன்றின. இதனால் மக்கள் தமது அன்றாட வாழ்வில் கருணையற்ற இம் முதலாளித்துவ சுரண்டலிலிருந்து இம்மியளவும் நிவாரணம் பெறவில்லை. அதைப் போலவே ஆந்திரப் பிரதேசத்திலிருந்து பிரிக்கப்படுவதாக உத்தேசிக்கப் பட்டுள்ள புதிய மாநில உழைக்கும் மக்களும் எந்த பலனும் பெறமாட்டார்கள் என எமது கட்சியின் மத்தியக் கமிட்டி ஆணித்தரமாக உரைக்கிறது. ஏனெனில் மக்களின் அளவற்ற துன்பங்களுக்கும் அதிகரித்து வரும் வறுமைக்கும் ஆணிவேரான இச்சுரண்டல் முதலாளித்துவ அமைப்பு அப்படியேதான் இருக்கப் போகிறது. இருக்கும் மாநிலங்களில் ஒரு பிளவு ஏற்பட்டால், ஆந்திரப்பிரதேசத்திலிருந்து தெலுங்கானா உடைக்கப்பட்டால் அதன்மூலம் பதவி வெறி கொண்ட அரசியல்வாதிகளில், ஆணவங் கொண்ட அதிகாரிகளில் நிர்வாக காவல்துறை பெரும்புள்ளிகளில் ஒரு பகுதியினர்தான் பயன டைந்து புதிய மாநிலங்களை முன்னைப் போலவே கொடூரமாக ஆட்சி செய்வர். விலைவாசி யேற்றம், வேலையில்லாத்திண்டாட்டம், ஆலை மூடல், ஓட்டாண்டியாகும் விவசாயிகளின் வாழ்க்கை, புரையோடும் ஊழல் என உழைக்கும் மக்கள் முன்போலவே பிரச்சினைகளால் பீடிக்கப் படுவதுடன் புதிதாக அதிக நிதிச்சுமையையும் சேர்த்து சுமக்க வேண்டும்.

புதிதாகப் போட்டுக் கொண்ட தேர்தல் கணக்குப்படி, வரும் பாராளுமன்றத் தேர்தலில் அதிக சீட்டுக்களைப் பிடிக்கும் தனது உள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இத்தகைய நயவஞ்சக நடவடிக்கையை ஆளும் காங்கிரஸ் அரசாங்கம் எடுத்துள்ளது. இச் செயல், நாட்டில் ஆங்காங்கே தலைத்தோங்கி வரும் பிராந்திய மற்றும் சகோதரச் சண்டை களைத் தூண்டிவிடும் பிரிவினைவாத சக்தி களுக்கு ஊக்கம் அளித்துவிடும். இதன் விளைவு, வாழ்க்கையின் எரியும் அடிப்படை பிரச்சினை களை மையமாக வைத்து ஜாதி, மத, இன, மொழி, பிராந்திய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு உழைக்கும் மக்களின் அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட மக்களின் ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சிக்கு பெருத்த தடையை ஏற்படுத்தும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

# என் எல் சி பங்கு விற்பனைக்கெதிரான நெய்வேலித் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட தீரமிக்க போராட்டமும் - படிப்பினைகளும்

2013ஆம் ஆண்டு மே மாதத்தில் மத்திய அரசாங்கம், என்.எல்.சி.யின் 5% பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்ய முடிவு செய்தது. 2013–14 நிதி ஆண்டில் பல்வேறு மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பதன் மூலம் ரூ. 40,000/– கோடிப் பணத்தைத் திரட்டிப் பற்றாக்குறைப் பட்ஜெட்டின் ஒரு பகுதியை நிவர்த்தி செய்ய மத்திய அரசு திட்டமிட்டது. அதன் அடிப்படையில் மத்திய பொதுத்துறை நிறுவனமான என்எல்சியின் 5% பங்குகளை விற்பதன்மூலம் ரூ. 466 கோடிப் பணத்தைத் திரட்ட முடிவுசெய்தது. கடந்த மே மாதம் இப்பிரச்சினையில் தமிழக முதல்வர் தலையிட்டு, இப்பங்கு விற்பனையை நிறுத்த வேண்டும் எனக் கடிதம் எழுதினார். ஜுன் 4ந் தேதி நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு தள்ளி வைக்கப்பட்டது.

ஜுன் 2வது வாரத்தில், இப்பிரச்சினை மீண்டும் தலைதூக்கியது. மத்திய அமைச்சர்கள் அனைவரும் பங்கு விற்பனை அவசியம் தேவை என்றும் என்எல்சி நிறுவனம் அதற்கு விதிவிலக்கல்ல என்றும் கூறினர். தொழிலாளர்களும் பல்வேறு தொழிற்சங்கங்களும் இப்பங்கு விற்பனையை எதிர்த்ததைத் தொடர்ந்து அரசியல் கட்சிகளும் எதிர்ப்பதாகக் கூறின.

### பங்கு விற்பனையின் பின்னணி

நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைத்தான் தனியார்மயமாக்குவோம், லாபத்தில் இயங்கும் நிறுவனங்களை அல்ல என முன்பு மத்திய அரசாங்கம் கூறிவந்தது. லாபத்தில் இயங்கும் நவரத்தின அந்தஸ்து பெற்ற என்எல்சி போன்ற நிறுவனங்களையும் தனியார்மயமாக்க 'பட்ஜெட் பற்றாக்குறை' 'செபியின் (SEBI) நிபந்தனை' என்ற புதிய காரணங்களை தற்போது கூறுகிறார்கள். எனவே அதிக லாபம் ஈட்டும் நிறுவனங்களின் பங்குகளை, பங்கு மார்கெட்டில் பரிவர்த்தனை செய்வதற்கு ஏதுவாக, பங்கு மூலதன விலக்கல் (பங்கு விற்பனை) செய்ய வேண்டும் என மத்திய அரசாங்கம் கடந்த வருடம் விளக்கம் அளித்தது. என்எல்சி அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்கங்களுக்கும், அதிகாரிகள் சங்கங்களுக்கும், சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பாகவே என்.எல்.சி. நிர்வாகம் பங்கு விற்பனையைப்பற்றிய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கியது. அனைத்து சங்கங்களும் ஒருமித்த குரலில் மக்களின் பொதுச் சொத்தான என்எல்சியின் பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகள் விற்பனையை அனுமதிக்க முடியாது என எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த எதிர்ப்புகளை துச்சமாக எண்ணி மத்திய அரசாங்கம் பங்கு விற்பனைக்கான பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தது. மத்திய அரசாங்கத்தின் பொதுத்துறை பங்கு விற்பனை உள்ளிட்ட அனைத்துத் தொழிலாளர் விரோதப் போக்குகளையும் தடுத்து நிறுத்த, மத்திய பட்ஜெட் அறிவிப்புக்கு முன்பாக, மத்திய தொழிற்சங்கங்கள் பிப்ரவரி 20–21 ஆகிய இரண்டு நாட்கள் அகில இந்திய வேலை நிறுத்த அறைகூவல் விடுத்தன. இப்போராட்டங்களைப் பற்றி எப்போதும் கவலைப்படாத மத்திய அரசாங்கம், இந்த முறை மத்திய தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசியது. தொழிற்சங்கத் தலைவர்கள், மக்கள் விரோத – தொழிலாளர் விரோத – முதலாளித்துவ ஆதரவுக் கொள்கைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினர். ஆனால் மத்திய அரசாங்கம் பொதுத்துறையின் பங்குகளைத் தாரை வார்த்தல், கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கு ரூ.5 லட்சத்து 70 ஆயிரம் கோடிக்கு வரிச் சலுகைகள், வெளிநாட்டு மூலதனத்தை தங்கு தடையன்றி சில்லரை வர்த்தகத்திலும் அனுமதித்தல், எரிபொருள்–உணவு–உரம் ஆகியவற்றுக்கான மானியத்தைக் குறைத்தல் உள்ளிட்ட மக்கள் விரோத–தொழிலாளர் விரோதத் திட்டங்களை பட்ஜெட்டில் அறிவித்தது. பட்ஜெட் பற்றாக்குறை ரூ. 5,42,499 கோடி என அறிவித்தது. பட்ஜெட் பற்றாக்குறையை சமாளிக்க பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பது, கடன் வாங்குவது, பணம் அச்சடிப்பது எனப் பொருளாதாரச் சீர்குலைவு வழிகளைக் கூறியது.

### என்எல்சி தொழிலாளர்களின் எழுச்சியும், மக்களின் எதிர்ப்புக்குரலும்

மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத பட்ஜெட், விலைவாசி உயர்வு, பெட்ரோல் – டீசல் விலை உயர்வுகள், லஞ்சம், பெருகி வரும் ஊழல், கல்வி–சுகாதாரம் தனியார்மயத்தால் ஏற்பட்ட கேடுகள்– இவற்றுக்கு எதிராக மக்களின் கோபமும் எதிர்ப்பும் பெருகி வந்த சூழலில், தமிழகத்தைத் தலைமை மையமாகக் கொண்டு செயல்படும் என்எல்சி நிறுவனத்தின் பங்கு விற்பனை அறிவிப்பு வெளியானது. தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரும் தமிழகம் முழுவதும் எதிர்ப்புக் குரல் எழுப்பினர். நெய்வேலித் தொழிலாளர்கள், பொறியாளர்கள், பொதுமக்கள் ஒன்றுபட்டப் போராட்டத்திற்குத் தயாரானார்கள். தமிழக முதல்வரும் பங்கு விற்பனையை நிறுத்த வேண்டும் எனப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார்.

### இந்தியப் பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) கட்டளை

மே மாத வாக்கில் பங்குகளை விற்பது உறுதி எனும் நிலைப்பாட்டை ஜுன் 21ல் மத்திய அமைச்சரவை எடுத்தது. 2009ல் கொண்டு வரப்பட்ட இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியத்தின் (செபி - SEBI) திருத்தங்கள் காரணமாக இந்நிலைபாடு கொண்டுவரப்பட வேண்டும், அதை அமுல் படுத்துவதற்கான கடைசித் தேதி ஆகஸ்ட் முதல் வாரம் எனவும் வாதிட்டனர்.

சூதாட்டக் களமாக விளங்கும் 'செபி'யின் திருத்தங்களுக்கு பொதுத் துறை நிறுவனங்கள் கட்டுப்பட வேண்டும் எனும் மத்திய அரசின் விளக்கம் மேலும் கோபத்தையும் கொந்தளிப்பையும் உருவாக்கியது. 'செபி' வாரியம் எந்த வகையில் மத்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும்? ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது கொண்டு வந்த செபி திருத்தமானது ஒருபுறம் பொதுத்துறைப் பங்குகளைத் தனியாருக்குத் தாரைவார்ப்பது, மறுபுறம் 'சூதாட்டத்தில்' தனியாருடைய பரிவர்த்தனை பெருகவேண்டும் எனும் நோக்கோடு கொண்டு வரப்பட்டதுதான் ஆகும். இது எள்ளளவும் பொது மக்களுக்குப் பயன்படப் போவதில்லை. மாறாக பொதுச் சொத்துக்கள் மற்றும் உற்பத்தி சாதனங்கள் தனியார் வசம் செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதே உண்மை. இவ்வுண்மைகளின் அடிப்படையில் ஒன்றுபட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

### தொடர்ச்சியான போராட்ட இயக்கங்கள்

என்எல்சி பங்கு விற்பனையைத் தடுத்து நிறுத்தக் கோரி, தொழிலாளர்களின் எழுச்சி மற்றும் அதற்கு தமிழக மக்களின் ஆதரவும் பெருகிக் கொண்டு வந்த சூழலில், தமிழக பொதுத்துறை நிறுவனமான, என்எல்சியின் 5% பங்குகளை தமிழக அரசாங்கம் வாங்கிக் கொள்ளும் என மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியது. இந் நடவடிக்கை தொழிலாளர்களின் கோரிக்கையைத் திசைதிருப்பியும், செபியின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டும், முதலாளித்துவ வர்க்கத்திற்கும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கும் மாநில அரசாங்கமும் நம்பிக்கையான சேவகரே என்பதை நிரூபித்தது. என்எல்சி நிர்வாகம் போராட்டத்தை ஒடுக்க, உயர்நீதிமன்றத்தை நாடித் தடை ஆணை பெற்றது. பல்வேறு மிரட்டல்களை விடுத்துப் பொறியாளர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளாமல் பார்த்துக் கொண்டது. பொதுமக்கள் ஆதரவுடன் அனைத்துத் தரப்புத் தொழிலாளர்களும் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஜுலை 3ந் தேதி இரவு முதல் துவங்கிய தொடர் வேலைநிறுத்தம் பதின்மூன்று நாட்கள் நீடித்தது. முற்றுகைப் போராட்டம், ரயில் மறியல், சாகும்வரை உண்ணாவிரதம் என அடுக்கடுக்காகப் போராட்டங்கள் வளர்ந்தன. தீரமிக்க நெய்வேலித் தொழிலாளர்களின் இப்போராட்டம் மெச்சத்தக்க தாகும். உயர்நீதிமன்ற ஆணையையும் மீறி, போராட்டத்தை முன்னெடுத்து, பாட்டாளி வர்க்கத்தின் உறுதியை வெளிப்படுத்தினர். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியும், அதன் வழிகாட்டுதலில் இயங்கும் ஆல் இந்தியா யுடியுசி (AIUTUC), தொழிற்சங்கமும், இவற்றை துவக்கத்திலிருந்தே கட்டுரை வாயிலாகவும், போராட்டங்களில் பங்கேற்ற தலைவர்கள், ஊழியர்களின் உரைகளிலும், விளக்கி தொழிலாளர்களுக்கு விழிப்பூட்டி, சமரசமற்ற, புரட்சிகர உணர்வை ஊட்டி வந்துள்ளது. 144 தடை உத்தரவுகள், ஆயிரக்கணக்கான போலீஸ் படையைக் குவித்து தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு ஒருபுறம் மிரட்டல், மறுபுறம் பங்கு விற்பனையைத் தடுத்து நிறுத்துவதாகப் பாவனை என அதிமுக அரசாங்கத்தின் போக்கையும் தொழிலாளர்கள் புரிந்து கொள்ளாமல் இல்லை. பிரதான எதிர்க்கட்சியான திமுகவும், அதிமுகவின் கூட்டணி போல செயல்படும் சிபிஐ(எம்), சிபிஐயும் போராட்டம் அதன் தர்க்க ரீதியான முடிவை எட்ட அனுமதிக்க வில்லை.

தொழிலாளர்களின் போராட்டங்களையும், தமிழக மக்களின் எதிர்ப்பையும் தந்திரமாக திசை திருப்பி, மத்திய அரசாங்கத்தின் பங்கு விற்பனையை அமுல்படுத்திய சாதனையை, அதிமுக அரசாங்கத்தின் சாதனை எனவும், திமுகவின் வெற்றி எனவும் இவ்விரு கட்சிகளும் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனர். இது தொழிலாளர்களுக்கும், மக்களுக்கும் செய்த துரோகம். முதலாளித்துவ வர்க்கத்துக்குச் செய்த சேவகம் அன்றி வேறல்ல.

1995ல் என்எல்சியின் பங்குகளை வங்கிகள், எல்ஐசி,என்எல்சி தொழிலாளர்களுக்கு விற்பனை செய்வதைத் தடுத்து நிறுத்தக் கோரி போராட்டம் துவக்கப்பட்டது. போதிய எதிர்ப்பும், விழிப்புணர்வும் இல்லாததால் 6.44% பங்குகளை விற்றனர். அடுத்து 10% பங்குகளை விற்க மத்திய அரசாங்கம் முடிவெடுத்து, பங்கு விற்பனை தள்ளிப் போடப்பட்டது. 2009ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பங்கு விற்பனை முயற்சிகள், எதிர்ப்புகள் மூலம் பின் வாங்கச் செய்யப்பட்டது. 2013ல், ஒன்றுபட்ட போராட்டம், தமிழக பொதுத்துறை நிறுவனங்களுக்கு 3.56% பங்குகளை விற்கும் முடிவிற்கு தற்போது இட்டுச் சென்று உள்ளது. மத்திய அரசாங்கம், செபியின் பங்குப் பரிவர்த்தனையை அதிகப்படுத்த, குறைந்தபட்சம் 25% பரிவர்த்தனை, பொதுத்துறை பல்வேறு நிறுவனங்களின் பங்குகளை விற்பதன் மூலம் பெற முடியும் என இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறது. ஊகப் பணப் பரிவர்த்தனைக்கு ஊக்கம் அளித்து வருகிறது. தொழிலாளர்களின் உழைப்பில் உருவான பல லட்சம் கோடி மதிப்பிலான பொதுத்துறை நிறுவனங்கள் பல்வேறு அரசாங்கங்களால் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது. இத்தாக்குதல்களை எதிர்த்து தொடர்ந்து பங்கு விற்பனையை நிறுத்துக என்ற அதன் இலக்கான ஒருங்கிணைந்த மக்கள் எதிர்ப்புகள் உருவாக வேண்டும்.

### வர்க்க சமூக அமைப்பில் அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் ஒரு வர்க்கத்தின் இயந்திரமே

தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது மத்திய அரசாங்கம் பங்குகளை விற்கக் கூடாது என்று தமிழக அரசாங்கத்தின் சார்பில் முதலமைச்சர் கடிதம் எழுதியிருந்த போதிலும், போராட்டம் துவங்கிய போதே, வடக்கு மாவட்ட ஐ.ஜி. திரு கண்ணப்பன் அவர்கள் தலைமையில் சுமார் 2000 போலீஸ் படையை பாதுகாப்புப் பணிக்காக என்ற சாக்கில் நெய்வேலியில் குவித்து, அச்சமூட்டிய தமிழக அரசின் நிலை என்ன என்பது தெளிவாகியுள்ளது. மேலும் இந்த போலீஸ் குவிப்பு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே சென்றது.

"பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெண் காவலர்கள் உட்பட 3000 பேர் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சாப்பாட்டுச் செலவுக்காக நபர் ஒன்றுக்கு ரூ.200/– ஆகிறது. அது மட்டுமின்றி அவர்களின் ரோந்து வாகனங்களின் டீசல் செலவு, தங்குமிடம் என என்எல்சி நிறுவனத்தின் பணம் வாரி இறைக்கப்படுகிறது" (தினமலர் 7, ஜுலை 2013) என்பது ஊடகச்செய்தி. இந்த பணம் எங்கிருந்து வந்தது? அதன் மூலம் என்ன? இந்தப் "பண இறைப்பு" சிக்கனம் பற்றி பேசும் அரசாங்கத்தின் – பொதுத்துறையின் போலித்தன்மையை தோலுரிக்கின்றது. என்எல்சியானது மக்களின் வரிப் பணத்தில், அவர்களின் நிலத்தைக் கையகப்படுத்தி, பூமிக்கடியிலுள்ள 'பழுப்புத் தங்கத்தை' (நிலக்கரியை) வெட்டி எடுத்து, அனல் மின்சக்தியாக மாற்றிய, 17200 நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் சுமார் 13000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 4304

தொடர்ச்சி 7ம் பக்கம்

# வன்முறையில்–சிக்கித்தவிக்கும் பாகிஸ்தான், அதன் சமீபத்திய தேர்தலும் அங்குள்ள ஜனநாயக இயக்கப் பிரச்சினைகளும்

இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள நாடுகளில் ஒன்று பாகிஸ்தானாகும். நீண்ட காலமாக ஒரே நாடாக இருந்து பின் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து ஒரே நேரத்தில் சுதந்திரம்பெற்று தனித்தனி நாடுகளாகப் இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிந்தன. எனவே இன்றும்கூட, சகோதரத்துவ உணர்வு கொண்ட இருநாட்டு மக்களிடமும் எல்லைக்கு அப்பால் நடைபெறும் எந்தவொரு முக்கியமான நிகழ்வும் சூழ்நிலைமைகளும் ஆழ்ந்த அக்கறையுடன் சரியாக கணிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

### தீவிரவாதம், ஊழல், சுரண்டல் மற்றும் அடக்குமுறையின் அட்சயபாத்திரமாக ஆகிவிட்ட பாகிஸ்தான்

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்று **65** ஆண்டுகளுக்கும் மேலாகியும் மூன்று ராணுவக் கிளர்ச்சிகள் மூலம் கிட்டத்தட்ட **35** ஆண்டுகளுக்கும் மேல் அந்நாட்டு மக்கள் ராணுவ ஆட்சியிலேயே *(1958 – 1971, 1977 – 1988, 1999 – 2008)* காலம் தள்ளியுள்ளனர். இதில் இடையிடையே பாராளுமன்ற ஜனநாயகம் அல்லது குடிமக்கள் அரசாங்கங்களையும் அதோடு ஏராளமான வெற்றிபெறாத ராணுவக் கிளர்ச்சியினையும் கண்டுள்ளனர். ஆனாலும் கூட இந்த குடிமக்கள் அல்லது பாராளுமன்ற ஆட்சிகளும் கூட நீடித்திருப்பதற்கு ராணுவத்தின் ஆதரவும் மேற்பார்வையும் தேவைப்பட்டது.

மதம் என்ற வலுவற்ற காரணத்தின் அடிப்படையில் பிளவுபடாத இந்தியாவிலிருந்து பிரிந்து பாகிஸ்தான் ஒரு முஸ்லீம் நாடாக உருவெடுத்ததை நாம் அறிவோம். சுதந்திரத்திற்கு முன்பு பிளவுபடாதிருந்த இந்திய நாட்டில் இரண்டு பெரிய மத சமூகங்களான இந்துக்களையும் முஸ்லீம்களையும் எப்போதும் சண்டையிடச் செய்து பிரித்தாள்வது என்ற கொள்கையை தனது ஆட்சிக்காலம் முழுவதும் பின்பற்றிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியே இப்பிரிவிற்குக் காரணம். இரண்டு சமுதாய மக்களின் தலைவர்களும் இந்த சூழ்ச்சிக்குப் பலியாயினர். அதோடு கூடவே, நிலப்பிரபுத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகப் போராடி பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுபட்டு இந்திய தேசம் உருவான விதம், முஸ்லீம்கள் அதிகம் வசிக்கும் பாகிஸ்தானில், குறிப்பாக தொலைதூர வளர்ச்சியடையாத பகுதிகளில், எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஏனென்றால், தேசத்தைக்கட்டியெழுப்பும் இயக்கத்தின் தலைமையான இந்திய முதலாளிகள், இயற்கையாகவே சமரசவாதத் தன்மை கொண்டிருந்ததால் இந்திய தேசியவாதம் நடைமுறையில் ஓர் இந்து மதம் சார்ந்த தேசியவாதமாக உருவெடுத்ததே இதற்குக் காரணமாகும். பின்னர் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிராக இங்கு நடந்ததுபோல இணையான போராட்டங்களும் நடைபெறவில்லை. எனவே நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே தன்மையுடைய நவீன ஜனநாயக தேசமாக உருவெடுப்பதற்கு மாறாக, பாகிஸ்தான் உருவானது முதலே செயற்கையாக சேர்த்துவைக்கப்பட்ட அரசாகவே உருவானது. அங்கே பாகிஸ்தானின் ஒட்டுமொத்த சந்தையையும் கைப்பற்றும் அவாவோடு அங்குள்ள உள்நாட்டு முதலாளிகள் அவசரமாகப் பதவியேற்றுக் கொண்டனர். அதன் போக்கில் நிலப்பிரபுத்துவத்தையும் அதோடு அதன் பிரிவினைவாத மத வெறித்தனத்தையும் வலுவாக இணைத்து வைத்துக் கொண்டனர். அதன் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பல்வேறு மதப்பிரிவுகளாகவும், சமுதாயங்களாகவும், பகை கொண்ட பழங்குடியினராகவும், பல்வேறு நம்பிக்கைகளையும் கலாச்சாரத்தையும் மொழிவேறுபாடுகளையும் கொண்டு பிளவுபட்டு இருந்த இந்த பலதரப்பட்ட மக்களை செயற்கையாகவும் கட்டாயமாகவும் ஒன்றாக வெறுமனே மத அடிப்படைவாதத்தை வைத்து மட்டும் கட்டுப்படுத்தி வைக்கவில்லை, மாறாக நாட்டின் ராணுவ வலிமையை செலுத்தியும் கட்டுப்படுத்தி வைத்தனர். இச்சூழ்நிலை பாகிஸ்தான் நாட்டின் அரசு செயல்பாடுகளில் ராணுவத்தின் ஆதிக்கத்திற்கு வழிவகுத்தது.

பாகிஸ்தான் நாட்டை ஒரு தேசமாக கட்டியெழுப்புவதற்கு மதம் உதவிபுரியும் என்று முஸ்லீம் லீக் ஆட்சியாளர்கள் நினைத்தனர். ஆனால் அதுவும் வேறுவிதமாக ஆனது. இன்றைய சூழலில் மதத்தால் மக்களை ஒன்றுபடுத்த முடியவில்லை, முடியாது. பாகிஸ்தானிலும் மதம் மக்களை ஒன்றுபடுத்துவதற்கு மாறாக, அது பிரிவினை, அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறைகளுக்கான விதைகளை விதைத்தது. அதனால் ஒருபுறம் சீருடை அணிந்த ஆயுதத்தாலும் (ராணுவத்தால்) மறுபுறம் பல்வேறு மதவாத பழமைவாத சக்திகள் கக்கிய மதவெறி தேசியவாதம் என்ற விஷத்தாலும் அதனால் விளைந்த கற்பனைசெய்து பார்க்கமுடியாத தீவிரவாதத்தாலும் பாகிஸ்தான் சீரழிக்கப்பட்டது. அங்கே இங்கொன்றும் அங்கோன்றுமாக பிரிவினைவாத பிளவுவாத சக்திகளும் உள்ளனர். பழங்குடியின நிலச்சுவாந்தார்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் இவர்கள் தொடர்ந்து ஒருவருக்கொருவர் ரத்தம்சொட்ட சண்டையிட்டு வருகின்றனர். அரசின் உளவுப்பிரிவும் மக்களிடையே அனைத்து விதமான அரசு தீவிரவாத எண்ணங்களையும், ஒற்றுமையின்மையையும், மோதல்களையும் விதைத்து வளர்த்து வந்தது. ராணுவமும், பாகிஸ்தானின் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் நிலப்பிரபுத்துவ அல்லது பழங்குடியின நிலச்சுவாந்தார்களின் ஆளும் ஏஜண்டுகள் அல்லது அரசியல் மேலாளர்களான அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும், இந்த அபாயகரமான பழமைவாத பிரிவினைவாத அப்பட்டமான சந்தர்ப்பவாதிகளைப் பயன்படுத்தி தங்களுக்குள், தொடர்ச்சியாக சண்டையிட்டுக்கொண்டதோடு, பல சமயங்களில் அவர்களது கைப்பாவையாகவும் மாறிவிட்டனர். கட்சி பேதமின்றி அங்குள்ள அரசியல்வாதிகளின் ஒரே எண்ணம், எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் பாகிஸ்தான் நாட்டின் இயற்கைவளங்களைக் கொள்ளையடித்து பகிர்ந்து கொள்வதும், அதோடு ஏகாதிபத்தியங்கள் மூலம் கிட்டும் நிதி உதவிகளை அபகரிப்பதுமே ஆகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக அவர்கள் ஏகாதிபத்தியங்கள் கேட்கும் எல்லாவற்றையும் அளிக்கத் தயாராகிவிட்டனர், ரகசியங்களைக் கூறக்கூடத் தயங்கவில்லை. இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியோ நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றியோ மக்களைப் பற்றியோ அவர்கள் கிஞ்சித்தும் நினைக்கவில்லை. அதன் விளைவுகளை மக்கள் தான் அனுபவிக்கின்றனர்.

இந்த அபாயகரமான திட்டத்தை மக்களிடமிருந்து மறைத்து அவர்களைத் திசைதிருப்புவதற்காக, பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் காஷ்மீர் பிரச்சினையை தங்களது பிரதான ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தூண்டப்பட்டு பின்னர் அமெரிக்க மற்றும் பிற ஏகாதிபத்தியங்களால் தூபம் போடப்பட்ட இந்த காஷ்மீர் பிரச்சினையை, பாகிஸ்தான் ஆளும் வர்க்கம், இந்திய ஆளும் வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்தின் உறுதுணையோடு, தீர்க்காமல் அப்படியே எரியவிட்டு வருகிறது. இதைவைத்து அவர்கள் மிகவும் விஷத்தன்மையோடு மக்களிடையே இந்திய–எதிர்ப்பு மனநிலையை உருவாக்கிவிட்டனர், இதை சாக்காக வைத்துக்கொண்டு பட்ஜெட்டில் பொருளாதாரத்திற்கு, ஏன் பொது மக்களின் நலத்திட்டங்களுக்குக் கூட குறைவாக நிதி ஒதுக்கிவிட்டு அதே சமயம் ராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தி, மரண ஆயுதங்கள், போர்த் தளவாடங்கள் வாங்குவதற்கும் அதோடு ஏகாதிபத்தியங்களிடமிருந்து உதவிகளையும் ஆதரவையும் பெறுவதற்கும், வெறியைத் தூண்டுவதற்கும், பிரச்சினையை தீர்ப்பதற்கு முற்போக்கான பகுத்தறிவான அணுகுமுறை வளராமல் தடுப்பதற்கும், அப்பாவி மக்களையும் கொல்லக்கூடிய ஏராளமான ஆயுதம் தாங்கிய வன்முறைக் கும்பல்களை உருவாக்குவதற்கும் செலவிட்டனர். இவை எல்லாவற்றையும் செய்வதற்கு பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் மதத்தைப் பயன்படுத்தினர், அதன் விளைவாக மிக மோசமான மத வெறிவாதம் வளர்ந்தது, இதனைப் பயன்படுத்திக் கொண்டு அரசு ஆதரவு பெற்ற பழமைவாதக் குழுக்கள் பரவின. வளர்த்த கடா மார்பிலே பாய்வதுபோல, வரம் கொடுத்தவன் தலையிலேயே கை வைப்பவர்களாக இந்தக் குழுக்கள் பாகிஸ்தான் நாட்டிற்கே அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளனர்.

நிலப்பிரபுத்துவ பழமைவாதம் கலந்த முதலாளித்துவ ஆட்சி சூழலாலும் சுரண்டலாலும் விளைந்த குழப்பமான நிலைமை அங்கே ஏகாதிபத்தியங்கள் தலையிடுவதற்கும் ஆதிக்கம் செலுத்துவதற்கும் ஏதுவாக அமைந்துவிட்டது. இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தெற்கு ஆசியாவின் முக்கியப் பகுதியாக விளங்கும் இந்நாட்டை அதன் ஆரம்பம் முதலே அமெரிக்காவின் தளமாக மாற்றிவிட்டனர். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பாகிஸ்தானை தென் கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்த அமைப்பு (SEATO), மத்திய கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்த அமைப்பு (CENTO) போன்ற ராணுவ கூட்டமைப்பிற்குள் இழுத்து வந்த அமெரிக்கா, அதோடு அங்கே அரசியல் ஸ்திரமற்ற தன்மையையும் கொந்தளிப்பையும் உருவாக்குவதற்காக அனைத்து வகையான சதி நடவடிக்கைகளையும் தூண்டிவிட்டது. மறுபுறம் பாகிஸ்தான் ஆட்சியாளர்களோடு நெருங்கிய உறவு வைத்துக் கொண்டு தனது நவீனகாலனி ஆதிக்க சுரண்டலை நடத்தியதன் மூலம் பாகிஸ்தானின் பொருளாதாரத்தை சீர்குலைத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் அங்கே சுதந்திரமான தொழிற்சாலைகள் வளர்வதற்கும் மிகப்பெரும் தடையாக இருந்தது; தங்களுடைய பொருட்களை விற்கவே பாகிஸ்தான் சந்தையைப் பயன்படுத்தினர். இதன் விளைவாக பாகிஸ்தான் அமெரிக்கா மற்றும் இதர ஏகாதிபத்தியங்களின் ஆதரவை, அதாவது நிதியை, சார்ந்து வாழும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டது. அதே நேரத்திலும் எந்தவித முற்போக்கு சிந்தனைகளும் வளர்வதைத் தடுப்பதிலும், ஜனநாயக இயக்கங்கள் மலர்ந்து விடாமல் தடுப்பதிலும், உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி தோன்றிவிடாமல் தடைவிதிப்பதிலும் பாகிஸ்தானுக்கு அனைத்து விதத்திலும் அமெரிக்கா பக்கபலமாக இருந்துவருகிறது.

இதற்கிடையே எரிகின்ற தீயில் எண்ணையை ஊற்றுவதுபோல், ஆப்கானிஸ்தானில் தங்கிய சோவியத் யூனியன் படைகளை விரட்டுவது என்ற போர்வையில் பாகிஸ்தான் ஆட்சியாளர்களோடு இணைந்து அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அங்கே தாலிபான்களை உருவாக்கி, சீராட்டி வளர்த்தெடுத்தனர். எதற்கும் அஞ்சாத பழமைவாத தாலிபான்களிலிருந்துதான் அல் கொய்தா தீவிரவாத அமைப்பு உருவானது. பின்னர் அதே தாலிபான்கள் தங்களை உருவாக்கிய அமெரிக்காவின் மீதே தாக்கினார்கள். அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் அமெரிக்காவின் கொலைபாதக உக்கிரத் தாக்குதலுக்கு ஆளானது. அதன் பாதிப்பு அண்டை நாடான பாகிஸ்தானிலும் உணரப்பட்டது. தாலிபான்களுக்கு மட்டுமல்லாது அல்கொய்தாவிற்கும், ஒசாமா பின்லேடன் போன்ற அதன் தலைவர்களுக்கும் கூட பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் தங்கள் நாட்டில், குறிப்பாக பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில், புகலிடம் கொடுத்தனர். இந்த நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கோபத் தாக்குதல்களால் பாகிஸ்தான் மக்களிடையே அமெரிக்க எதிர்ப்பு எண்ண அலை உருவானது. அந்த அலையை தாலிபான்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். கோழைத்தனமான பாகிஸ்தான் ஆட்சியாளர்களின் அமெரிக்க ஆதரவு நிலையைக் கண்ட தாலிபான்கள் அவர்கள் மீது ஜிகாத் (புனிதப் போர்) அறிவித்தனர். அங்கே அரசியல் சமூக வாழ்க்கையில் தீவிரவாதத்தை பெருக்கெடுத்து ஓடச் செய்தனர். மறுபுறம், தாலிபான்களை அழிக்கிறோம் என்ற பெயரால், அமெரிக்க ஏகாதிபத்தியம் தாலிபான்களை நசுக்குவதற்காக பாகிஸ்தான் படைகளை ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அனுப்ப நிர்ப்பந்தித்தது. அதே காரணத்தைக் கூறி பாகிஸ்தான் பரப்பிற்குள்ளேயும் அமெரிக்கா தாக்குதல் தொடுத்தது, அதில் பாகிஸ்தான் வீரர்களும், ஏராளமான அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்பட்டனர், கடைசியாக ஓசாமா பின்லேடன் உள்ளிட்ட தாலிபான் அல்லது அல்கொய்தாவின் தலைவர்களையும் பாகிஸ்தானில் வைத்துக் கொன்றனர். தேசத்தின் இறையாண்மையை மீறக்கூடிய இத்தகைய வெளிப்படையான நடவடிக்கைகள் பாகிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகளை மேலும் தூண்டிவிட்டது. இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் தள்ளப்பட்டனர். அதனால் தான் சமீபத்திய ஜூலை **2013** வழக்கு உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க நேர்ந்தது. ஆனால் அதற்குப் பின்னரும் **2011**ல் நடைபெற்ற தாக்குதலில் **25** பாகிஸ்தானிய ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதனால் நேட்டோ வழித்தடங்களை பாகிஸ்தான் மூடியது, ஆப்கானிஸ்தான் குறித்து ஜெர்மன் நகரம் பானில்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# இராணுவம் மத அடிப்படைவாதம் மக்கள் வாழ்விற்கு பெரும் தடைகள்

3ம் பக்கம் தொடர்ச்சி

நடைபெற்ற பான் மாநாட்டை (Bonn conference) பாகிஸ்தான் புறக்கணித்தது. அமெரிக்காவின் இந்தத் தாக்குதல்கள் பாகிஸ்தான் ராணுவத்திற்கும் அந் நாட்டு ஆட்சியாளர்களுக்கும் தெரிந்தேதான், அவர் களுடைய ஒப்புதலோடுதான் நடந்தது என்பதை மூடிமறைக்க முடியவில்லை.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மறு சீரமைக்க உதவுகிறோம் என்ற பெயரால் விரிவாதிக்க எண்ணம் கொண்ட இந்திய ஆட்சியாளர்கள் ஆப்கானிஸ்தானில் கால்பதித்தனர். இதற்குப் பதிலடி யாக ஆப்கானிஸ்தானில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் அங்கே பாகிஸ்தான் ஆதரவு தாலிபான் – பழமை வாதிகள் இராணுவக் கூட்டைப் பயன்படுத்தியும் இந்திய–எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் மீண்டும் கையிலெடுத்துள்ளனர். இவையெல்லாம் சேர்ந்து பாகிஸ்தானை ராணுவம் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளின் கொதிகலனாக ஆக்கிவிட்டது. அங்கே ஜனநாயக உரிமைகள் ஏன் மனித உரிமைகள் கூட மக்களுக்கு பகல் கனவுகளாகிவிட்டன. எதிர்ப்புகள், ஏன் மாற்றுக் கருத்துகள் கூட கடுமையாக நசுக்கப்படுகின்றன. ஜனநாயக இயக்கங்கள் உருவாகவிடாமல் தடுக்கப்படு கின்றன. மார்க்சிய, முற்போக்கு இடதுசாரி சிந்தனை களோ அல்லது வாழ்க்கைக் கண்ணோட்டமோ ஈவிரக்கமின்றி ஒடுக்கப்படுகின்றன. அரசியல் கட்சிகளும் அதன் ஊழியர்களின் நடவடிக்கைகளும் கடுமையாகக் கண்காணிக்கப்படுகின்றன, ஏன் அவர்கள் தடுக்கவும் படுகின்றனர். நாசகார பழமை வாதத் தலைவர்களும் அவர்களது தலைவர்களும் உத்தரவுகளும் பல்வேறு பிரிவு மக்களிடையே மரணகரமான மோதல்களைத் தூண்டிவருகின்றன. சமூக வாழ்க்கை முழுவதுமே ஷ்ஃபாத்வாவின் சர்வாதி காரச் சங்கிலிக்குள் சிக்கித்தவிக்கின்றது, குறிப்பாக பெண்கள் கடுமையான அடக்குமுறைக்கும் ஒடுக்கு முறைக்கும் ஆளாகியுள்ளனர். ஒருதரப்பு மக்கள் மற்றொரு தரப்பு மக்களோடு மோதாத, ஒரு தரப்பு உறுப்பினர் கொல்லப்படாத நாட்களே இல்லை. அங்கே தனிநபர்கள் எவ்வித முகாந்திரமின்றி கொல்லப்படுகின்றனர்; மத வழிபாட்டுத் தலங்களில் கூடும் மக்கள் மீது தாக்குதல்கள் நடைபெறுகின்றன. பேருந்துகள்மீது கொடூரமான தாக்குதல்கள்; எப்போதாவது பெய்யும் மழையால் மகிழ்ச்சியுற்று வீட்டில் பிறர்முன் நடனமாடியதற்காக பெண் குழந்தைகளும், அதைத் தடுக்காததற்காக அவர் களது தாயார்களும் மனிதாபிமானமின்றி கொல்லப் படுகின்றனர். இது போன்று இன்னும் பல சம்ப வங்கள் முடிவில்லாமல் செல்கின்றன. இத்தகைய செயல்பாடுகளால் கடுமையான நிலையற்றதன்மை உருவாகி அது எந்த நேரமும் அந்நிய ஏகாதிபத்தி யங்கள் நுழைவதற்கும் தாக்குவதற்கும் இலகுவாக நாட்டை மாற்றிவிட்டது. பாகிஸ்தானின் ஆளும் வர்க்கங்கள் அவர்களது ராணுவம்–பழமை வாதிகள் அரசியல்வாதிகளின் நாசகாரக் கூட்டானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவோடும் உதவியோடும் நாட்டையே வேட்டைக்காடாக மாற்றி விட்டது. படிப்பறிவின்மை–பகுத்தறிவின்மை, மத சகிப்பின்மை மற்றும் மத வெறி, ஊழல், எல்லா வற்றிற்கும் மேலாக ரத்தம் தோய்ந்த பயங்கரவாதம் போன்றவை அங்கே இருண்ட சூழலை ஏற்படுத்தி விட்டன. மற்ற நாடுகளில் நிலவும் மிகக் குறைந்த பட்ச ஜனநாயகம் கூட இங்கே இல்லை. அதிகா ரத்தின் அனைத்து மட்டங்களிலும், ஏன் சமுதாய வாழ்க்கையிலும்கூட, ஊழல் புரையோடிக்கிடக் கின்றது. முதலாளித்துவ உலகில் உள்ள எல்லா முதலாளித்துவ அரசாங்கங்களிலும் தற்போது ஊழல் மலிந்துகிடக்கின்றது. இதில் பாகிஸ்தான் முன்னணி இடத்தைப் பிடித்து சாதனை படைத் துள்ளது. ஆயிரத்தோரு வழிகளில் பெறப்படும் ஊழல் பணத்தை பல்வேறு அரசியல்வாதிகளுக்குப் பகிர்ந்தளிப்பதை மேற்பார்வையிடும் வேலையே இங்கே அரசாங்கங்களின் பணியாக உள்ளது. கணக்கு வழக்கில்லாத ஊழல் என்ற காரணத்தைக் கூறித் தான் பல்வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் ராணுவப் புரட்சியின் மூலம் கவிழ்க்கப்பட்டுள்ளன. தங்கள் பங்கிற்கு, ஊழல் மலிந்த ராணுவமும், அதிகாரத்தையும் பதவியையும் அடைவது மட்டு மின்றி அவர்கள் சொந்தமாக தொழிற்சாலை களையும் வைத்துள்ளனர், பொருளாதாரத்தின் போக்கையும் கட்டுப்படுத்துகின்றனர். இந்த ஒட்டு மொத்த போக்கில், ஆட்சியில் இருப்பவர்களும் பதவிக்கு வரத் துடிப்பவர்களும், வாக்குகளை அதிகம் கைப்பற்றுவதில் ஆதாயம் தேடுவதற்காக பல்வேறு கொலைபாதக தீவிரவாதக் குழுக்களைக் கெஞ்சி அண்டி தூண்டிவிடுகின்றனர். இதற்குப் பின்னால் இருக்கக்கூடிய காட்டுமிராண்டித் தனமான மனித இன வரலாற்றின் மத்திய கால அவலங்களை நினைவூட்டுகின்றன. சுரண்டலற்ற அரசு இயந்திரம் மக்களை இறுதி சொட்டு ரத்தம் இருக்கும் வரை சுரண்டுகிறது. விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், படிப்பறிவின்மை, தொடர்ந்து இருக்கும் மின்சார தட்டுப்பாடு ஓரள விற்கேனும் கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கான சேவை கிட்டாமை உயிருக்கு உத்திரவாதமின்மை; இவை எல்லாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் மக்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச் சினைகளில் வெகுசில மட்டுமே. நிலப்பிரபுத்துவ–முதலாளித்துவ ஆட்சி, இப்பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிகளைக் காண்பதற்கு முயற்சிப் பதற்கு மாறாக பிரச்சினைகளை மேலும் உக்கிர மாக்குகின்றன. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மக்களின் இந்த துன்பங்களுக்கும் பயங்கர வாதத்தின் பிடியிலிருந்து விடுபடுவதற்கும் முயற்சி களை மேற்கொள்ளவோ திட்டங்களை தீட்டு வதிலோகூட தோற்றுவிட்டனர் அல்லது கைகழுவி விட்டனர். பிரிவினைவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, பயங்கரவாதத் தாக்குதல் களைத் தடுப்பதற்கு அடுத்தடுத்து வந்த அரசாங் கங்கள் மேற்கொண்ட ஒரு சில அரைகுறை நடவடிக் கைகளைத் தவிர நீண்ட காலத் தீர்வுக்கான எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் இந்த கொலைகார பழமைவாதிகள் தங்களுக்கென்று சட்டங்களை வைத்துக் கொண்டு ஒரு அரசாங்கத்திற்கு இணையான ஆட்சியை நடத்திவருவதுபோல் தெரிகிறது. கேள்வி கேட்கப் படாமல் நடத்தப்படும் இதுபோன்ற இணை அரசாங்கங்கள் காலப்போக்கில் மிகமோசமான வடிவம் எடுத்துவிட்டன. அது நச்சு வாயுவைப் பரப்பும் கொதிகலனாகிவிட்டது.

### சமீபத்திய தேர்தல், அதன் முடிவு, எதிர்காலம்

இத்தகைய சூழலில்தான் பாகிஸ்தானில் சமீபத்தில் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நெருங்கிய நேரத்தில் பாகிஸ்தான் எவ்வாறு ஜனநாயக முறையைத் தழுவப்போகிறது என்று ஊடகங்கள் கதைகளையும் ஆய்வுகளையும் வெளியிட்டனர். ஆனால் யாரை வைத்து, எந்த சூழ்நிலையில்? எந்த நேரமும் ராணுவத் தலையீடும் தாக்குதலும் நடை பெறலாம் என்ற நீங்காத அச்சம் நிலவுகிறது. ஊழலில் திளைத்து, நாட்டை சூறையாடி தரித்திரத் திற்குள்ளாக்கிய, ஏகாதிபத்தியங்களின் ஏஜெண்டு களாகவும் பழமைவாதிகளிடம் கையேந்தியவர் களுமான அதே அரசியல் கட்சிகளும் தலைவர் களுமே மீண்டும் தற்போது தேர்தல் களத்தில் நிற்கின்றனர். களத்தில் புதிதாகக் குதித்தவர் கூட எந்த வித்தியாசத்தையும் காணமுடியவில்லை. இந்த சக்திகளில் யார் வெற்றி பெற்றாலும் இவர்களி மிருந்து மக்கள் எதை எதிர்பார்க்க முடியும்? யார் வெற்றி பெறுவார்கள் என்று உத்தேசமான கருத்துக் கணிப்புகளும், வாக்குகளைக் கைப்பற்ற வேட்பாளர் களின் ஓட்டுவேட்டையும் நடந்துகொண்டிருக் கையில், மற்றொருபுறம் தீவிரவாதத் தாக்குதல்கள் எங்கும் நடைபெற்றுவருகிறது. ஏராளமான அயுதங் களை வைத்துள்ள தாலிபான்களும் அவர்களது குழுக்களும் அரசியல் ஊழியர்களை மிரட்டுவ தோடு மட்டுமன்றி வேட்பாளர்கள், மனித உரிமை ஆர்வலர்களில் தலைவர்கள் முதல் தொண்டர்கள் மீதும் கூட கொலை வெறித் தாக்குதல்களை நடத்தினர். தேர்தலில் போட்டியிட விரும்பியவர் களை இவர்கள் ஆயுதப் பலத்தை வைத்து மிரட்டி போட்டியிட அனுமதிக்கவில்லை. அவர்களுடைய ஒரே நோக்கம் மக்கள், பயத்தால் தேர்தலைப் பற்றி, வேட்பாளர்களைப் பற்றி, அதன் முடிவுகளைப் பற்றி சிந்திக்கக்கூட நேரமில்லாமல் செய்யக்கூடிய சூழலை நாட்டில் உருவாக்குவதுதான். தங்களுக்கு பயனுள்ளதாகவும் உதவிகரமாகவும் இருக்கக்கூடிய வேட்பாளர்களைத்தான் பாராளுமன்றத்திற்குள் எளிதாகச் செல்வதற்கு கொலைபாதக பழமை வாதிகள் அனுமதிப்பர். ஜனநாயகத்திற்கும் சமுதாயத் திற்கும் வெறுக்கத்தக்க எதிரிகள் தங்களது நயவஞ்சகத் திட்டங்களை சுதந்திரமாக செய்வதற்கு அனுமதித்து விட்டு எல்லா வல்லமையும் பெற்ற ராணுவம் இவற்றையெல்லாம் கண்டும் காணாதது போல் உள்ளது.

இந்தத் தேர்தலில் நிலப்பிரபுக்கள், முதலாளிகள், ராணுவம், மற்றும் தீவிரவாதிகளின் ஆதரவோடு நவாஸ் ஷெரிப் வெற்றிபெற்று மூன்றாவது முறை யாக பிரதமராகப் பதவியேற்றுள்ளார். 1991ல் அவர் முதல் முறையாக பிரதமராகப் பதவி வகித்த போதுதான், நவாஸ் ஷெரிபும் அவரது பிஎம்எல்என் கட்சியும், ஏகாதிபத்திய உலகமயம், பொருளாதார தாராளமயத் திட்டத்தை பாகிஸ் தானில் தொடக்கி வைத்தனர். பழமைவாதிகளை மகிழ்விப்பதற்காக 'இஸ்லாமிக் ஷாரியா' நடத்தையை முறையான சட்டமாக்கினார். ராணுவ நிர்ப்பந்தம் காரணமாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகளின் போலும் அவர் இருமுறை பிரதமர் பதவியை இழந்தார். ஏன் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டார், பின்னர் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். பின்னர் 2007ல் ராணுவத்தோடு சமரசம் செய்து கொண்டு அதன் நல்லாசியோடு நாடு திருப்பினார், அவரது கட்சி பாகிஸ்தான் மக்கள் கட்சியுடன் கூட்டு வைத்தது. பின்னர் விரைவிலேயே கூட்டணியை முறித்துக் கொண்டது. தற்போது 2013ல் அவர் பெரும் பான்மை பெற்றுள்ளார், அதுவும் அறுதிப் பெரும் பான்மையல்ல, அதுவும்கூட தீவிரவாதம் அச்சுறுத்தல் மிரட்டல் கொலை போன்ற மோச மான சூழலில் நடைபெற்ற பாரபட்சமான தேர்தல் மூலமாகவே இது சாத்தியமானது. இப்படிக் கொல்லைப்புற வழியாக தீவிரவாதச் சூழலை உருவாக்கி பதவிக்கு வருபவரால் மக்களுக்கு என்ன பெருத்த மாற்றத்தை நன்மையைச் செய்து விடமுடியும்? உண்மையில் இவையெல்லாம் நமக்கும் உணர்த்தும் உண்மை என்னவெனில், மீண்டும் அதே ஆளும் வர்க்கங்கள் ராணுவம் பழமைவாதிகள், எல்லாவற்றிற்கும் மேலாக தாலிபான்கள் ஏகாதிபத்தியவாதிகள் இவர்களின் நாசகார கூட்டணிதான் தொடர்ந்து வழக்கம்போல் தீர்மானிக்கும் சக்தியாக இருந்து நாட்டை வழி நடத்தப் போகிறார்கள் என்பதுதானாகும். இந்தக் கூட்டணியின் பல்லில்லா கைப்பாவையாக வேண்டு மானால் இந்த புதிய அரசாங்கம் திகழலாம். அப்படி இருக்கும்பட்சத்தில், பொருளாதார வட்டத்தில் ஏதேனும் உறுதியான நடவடிக்கைகள் எடுத்து மக்கள் வாழ்க்கைக்கு குறைந்தபட்ச நிவாரணத்தை யாவது கொடுப்பார்கள் என்றோ அல்லது இந்த நாசகார கூட்டணியை கட்டப்படுத்துவார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாது. இந்த அரசாங்க மாற்றத்தால் மக்கள் குரல்வளைகள் நசுக்கப் படுதல், ஜனநாயகம் திக்கித் திணறுதல், பாசிச மேகச் சூழல் நிலவுதல் போன்றவற்றில் மாற்றம் வராது, மாறாக அவை மேலும் அதிகரிக்கவே செய்யும். எதிர்க்கட்சிகளிடமிருந்தும் எதையும் எதிர் பார்க்க முடியாது. அவர்களுடைய குணத்தைப் பற்றி மக்கள் ஏற்கனவே அனுபவப்பட்டுள்ளனர். மாறாக தீவிரவாதம்–ஊழல்–அடக்குமுறை–சுரண்டல் ஆகியவற்றை உருவாக்கிப் பரப்புவோர் தாங்கமுடியாத விலைவாசி உயர்வு, ஊழல், கட்டுப் படுத்த முடியாத வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றிற்கு எதிராக பேசக்கூடிய ஜனநாயக உரிமையைக் கூட மக்கள் பேணுவதற்கு ஒரு நாளும் அனுமதிக்கமாட்டார்கள். இவையெல்லாம் அப்படியேதான் இருக்கும். பாகிஸ்தான் ஒரு தோல்வி அடைந்த அரசாகவும், மற்ற நாடுகளின் நிதியை நம்பியும் காற்றும் கூட இன்றியே இருக்கும்.

### பாகிஸ்தானில் ஜனநாயக இயக்கங்கள் சந்திக்கும் பிரச்சினைகள்

இன்று கொலைகார ஊழல் மலிந்த ராணுவம், பயங்கர பழமைவாதிகள் மற்றும் நயவஞ்சகத் திட்ட முள்ள ஏகாதிபத்தியங்கள் என்ற இந்த நாசகார அப்பட்டமான பிற்போக்கு மும்மூர்த்திகளின் கூட்டணி பாகிஸ்தான் மக்கள் மீது கடுமையான தாக்குதல் தொடுத்து வருகின்றனர். இந்த சூழலில் அந்நாட்டின் தேசபக்திமிக்க, ஜனநாயக மற்றும் முற்போக்கு எண்ணம்கொண்ட, சரியாகச் சிந்திக்கும் பகுத்தறிவுவாத மக்களுக்கு மிகப் பெரிய பணி காத்திருக்கிறது. இந்த பிற்போக்குவாத சக்திகள் சுதந்திரமாக விளையாடுவதைத் தடுத்து முறியடிப் பதற்கு புதிய வழிமுறைகளை பிழையின்றி உடனடி யாகக் கண்டறிய வேண்டும். தேர்தல்களோ அல்லது வெறுமனே அரசாங்கங்க மாற்றங்களோ மக்க ளுடைய தேவைகளைப் பூர்த்திசெய்யாது என்பதை சுதந்திரம் பெற்ற பின்னர் வந்த பல பத்தாண்டு கால அனுபவங்கள் உணர்த்துகின்றன. நாட்டில்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# துருக்கி–பிரேசில்–எகிப்து மக்களின் வெடித்தெழும் கோபப் பேரலை

*2010*ம் ஆண்டின் இறுதியில் துவங்கி மக்களின் மாபெரும் போராட்ட இயக்கங்கள் சமீப காலமாக முதலாளித்துவ உலகை உலுக்கி வருகின்றன. டுனீஷியாவில் துவங்கி அரபிய உலகம் என அழைக்கப்படும் வடக்கு ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஆசியாவின் பல நாடுகளுக்கு காட்டுத் தீ என இப்போராட்டம் பரவியது. 'அரேபிய வசந்தம்' (Arabian Spring) என பிரபலமாக அழைக்கப்படும் இப்போராட்டங்கள் அந்தந்த நாடுகளின் பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கு எதிராக நடப்பவையாகும். இந்த ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியவாதிகளால் குறிப்பாக மனிதகுலத்தின் மிக மோசமான எதிரியான யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளால் ஆதரிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுபவர்களாவர். சமரசமற்ற சரியான தலைமை இல்லை என்ற குறைபாடு இருந்த போதிலும், தன்னெழுச்சியாக வெடித்தெழுந்த இவ்வியக்கத்தின் மிகப்பெரும் சக்தி தங்கள் கோரிக்கைகளுக்கு இந்நாடுகளின் ஏதேச்சதிகார ஆட்சியாளர்களை அடிபணிய வைத்துவிட்டது. டுனீஷியாவில் 23 ஆண்டுகளாகவும் எகிப்தில் 30 ஆண்டுகளாகவும் அதிகாரத்தில் இருந்த கொடூர ஆட்சியாளர்களை பதவியிலிருந்து தூக்கியெறிந்துவிட்டது.

இதன்பிறகு இரண்டாண்டுகள் உருண்டோடிவிட்டன. 'அரேபிய வசந்தம்' இயக்கங்களை நினைவில் கொண்டு ஐரோப்பிய–அமெரிக்க அல்லது ஆப்பிரிக்க, ஆசியா, லத்தின் அமெரிக்க நாடுகளில் தங்களின் சொந்த கோரிக்கைகளுக்காக சொந்த வழியில் வீதியில் இறங்கி போராடி வருகிறார்கள். ஆனால் இந்நாடுகளில் ஆளும் சுரண்டல் முதலாளித்துவ ஆட்சி எவ்வித மாற்றமுமின்றி தொடர்கிறது. எகிப்து. டுனீஷியா நாடுகளில் கூட பிற்போக்கு ஆட்சியாளர்கள் மீண்டும் வந்துவிட்டார்கள். எனவே அங்கு மீண்டும் மக்கள் தெருவில் இறங்கி போராடவேண்டியதாயிற்று.

சமீபகாலமாக சில சாதாரண நிகழ்ச்சிகளாகத் துவங்கிய போராட்டங்கள் மாபெரும் மக்கள் போராட்டங்களாக மாறிவிட்டன. ஆரம்பக்கட்டமாக, துருக்கியில் சென்ற ஆண்டு மே 28 ல் போராட்டம் துவங்கியது. கால்பந்தாட்ட பிரியர்களான பிரேசிலில் அவர்களது உயிருக்குயிரான சர்வதேச கான்ஃபெடரேசன் கோப்பை போட்டி நடக்கும் ஜுன் மாதத்தில்கூட அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இறுதியாக இவ்வருடம் ஜுன் 30ம் தேதி எகிப்தில் மொஹமத் மோர்சி அரசாங்கம் தேர்தலின் மூலம் பதவிக்கு வந்து ஒருவருட நினைவாண்டின் போது அவரை எதிர்த்து மக்கள் கோபங்கொண்டு வெடித்தெழுந்து கிட்டத்தட்ட உள்நாட்டுப் போர் என்ற அளவிற்கு போராட்டத்தை நடந்திவருகிறார்கள்.

## பாசிசத்திற்கு எதிராக துருக்கி மக்களின் ஒன்றுபட்ட தீரமிக்கப் போராட்டம்

துருக்கியில் இஸ்தான்புல் நகரில் வரலாற்றுப் புகழ்பெற்ற தக்சிம் சதுக்கத்திற்கருகே கேசி (Gezi) பூங்காவில் ஒரு வணிகவளாகம் (ஷாப்பிங் மால்) கட்டப்படுவதை எதிர்த்து மே 28 அன்று சிலர் கட்டுமானத்தைத் தடுக்க முயற்சித்தனர். உடனே கடந்த பத்தாண்டுகளாக பதவியில் இருக்கும் ஏ.கே. (ஜஸ்டிஸ் அன்ட் டெவலப்மென்ட்) கட்சியின் திமிர்பிடித்த பிரதமமந்திரி ஆர்.டி.எர்டோகன் தனது துருக்கி காவல்துறையையும் துணை காவற் படையையும் கொண்டு மிரட்டி அப்போராட்டங்களை ஒடுக்கினார். ஆனால் இதனைத் தொடர்ந்து 'பிரதமர் பதவி விலக வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்து நாடுமுழுவதும் போராட்ட அலை எழுந்தது. வயதானவர்கள், இளைஞர்கள், காற்பந்தாட்ட அணி ரசிகர்கள், ஆசிரியர்கள், கட்டிட நிபுணர்கள், ஏழை நடுத்தர வர்க்கத்தினர், மேல்தட்டு வர்க்கத்தினரிலும் ஒரு பகுதியினர் பெண்கள், மாணவர்கள் என பல இலட்சக்கணக்கானவர்கள் திரண்டு பல மைல் தூரம் நடந்து வந்து தக்சிம் சதுக்கத்தை அடைந்துவிட்டனர். தொழிலாளர்கள், மாணவர்கள், மருத்துவப் பணியாளர்கள் எல்லாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டும்கூட வீதியில் தடையரண்களை மீறும் போராட்டங்கள் ஓயவில்லை. இஸ்லாமிய குழுக்கள், சன்னி மற்றும் அலாவி பிரிவினர்கள், கிருஸ்துவர்கள் என இதுவரை தங்களுக்குள் நட்பில்லாமலிருந்த பல தரப்பினரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஒருவருக்கொருவர் காழ்ப்புணர்வு கொண்டிருந்த துருக்கியர், குர்தியர் மற்றும் அரேபியர்களும் கூட போராட்டத்தில் ஒன்றிணைந்து ஈடுபட்டனர். சின்னம் பொறித்த துருக்கியக் கொடிகளுடன் குர்திய கொடிகளும் அவற்றின் அருகிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கொடிகளும் அப்போராட்டத்தில் காணப்பட்டன. 'பாசிசத்திற்கு எதிராக தோளோடு தோள்நிற்போம்' என்ற கோஷங்கள் முழங்கப்பட்டன. நாடே உயிர்பெற்று எழுந்தது. பிரதமரும் அவரது அரசாங்கமும் அடக்குமுறை காவல் படையும் சுருங்கிப் பின்வாங்கின. மக்கள் அழுத்தம் கொடுத்ததினால் கெசிபூங்காவில் கட்டிடத் திட்டம் ஒரு நீதிமன்ற ஆணை மூலம் நிறுத்தப்பட்டது. கலகத்தை அடக்கும் சக்திவாய்ந்த காவற்படையும் தோல்வியைச் சந்தித்தது. ஆனால் நம்முன் எழுந்துள்ள கேள்வி, இத்தகைய மாபெரும் போராட்டத்தை நிராயுதபாணியான மக்கள் நடத்த எவை காரணமாயின?

சொல்லப்போனால், போராட்டக்களத்தை இஸ்லாமிய அடிப்படைவாத முதலாளித்துவ எர்டோகன் அரசாங்கமே அமைத்துவிட்டது. அறுதிப்பெரும்பான்மை வெற்றியுடன் அதிகாரத்திற்கு வந்துவிட்ட ஆணவத்தால் தனது விருப்பப்படி சுரண்டல் ஆட்சியை நடத்தத்துவங்கிவிட்டது. ஒருபுறம் பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் ஏற்கனவே நசிந்து கொண்டிருந்த ரியல் எஸ்டேட் மற்றும் நகர்மயமாக்கல் என்ற யூக வாணிபத்தை அந்த அரசாங்கம் அதிகரித்தது. ஏ.கே. கட்சி அரசாங்கம் அதிக வட்டி தருகிறோம் என்றதால் பேராசை கொண்ட அன்னிய நேரடி முதலீடும் மிகப் பெரிய அளவில் உள்நாட்டில் பாய்ந்தது. இதனால் ஏராளமாக அன்னியக் கடன்தான் உருவானது. ஆக இவை இரண்டுமே நெருக்கடியில் சிக்கியுள்ள துருக்கியின் முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்காக அதன் அரசியல் மேலாளராக செயல்படும் ஏ.கே. கட்சி அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏகாதிபத்தியத் திட்டமான உலகமய தாராளமய தனியார்மயக் கொள்கையின் அம்சங்களேயாகும். விளைவு, ஏழை பணக்காரன் இடைவெளி வெகுவாக அதிகரித்தது. ஏழை மக்கள் நகரின் விளிம்புகளுக்கு விரட்டப்பட்டார்கள். வேலையின்மைப் பிரச்சினை பெரிதாகியது. ஏழைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் கிடைத்துவந்த சமூகப் பாதுகாப்பு பயன்கள் நீக்கப்பட்டுவிட்டன. உழைக்கும் மக்கள் தொடர்ந்து ஓட்டாண்டியானார்கள்.

பொருளாதார ரீதியாகச் சுரண்டப்பட்ட மக்கள் இதைவிட மோசமானதொரு தாக்குதலுக்கும் உள்ளானார்கள். ஒட்டொமன் ராஜாங்கத்தை எதிர்த்து கமால் அட்டாதுர்க் தலைமையில் தேசியப் போராட்டம் நடத்தப்பட்டதால் துருக்கி சமுதாயம் ஒப்பீட்டளவிற்கு, மதச்சார்பற்ற ஜனநாயக சிந்தனைகளையும் மரபுகளையும் கொண்டிருந்தது. இந்த நிலை, ஆளும் சுரண்டல் வர்க்கத்திற்கு ஒரு தடையாக நிலவியது. எனவே ஆளும் வர்க்கத்திற்குச் சேவகம் செய்யும் எர்டோகன் அரசாங்கம் இருவகைத்தாக்குதலைத் தொடுத்தது. துருக்கிய பாதுகாப்பு அமைப்பு என்ற நாசகரமான அமைப்பை அவிழ்த்துவிட்டு கேட்பாரற்ற வகையில் கைது செய்தல், காணாமல் போகச் செய்தல், செய்தி ஊடகங்களின் மீது தணிக்கை என்ற இடுக்கிப்பிடி, பத்திரிகை, ஊடக நிருபர்களை கொடுமைப் படுத்துதல், அரசியல் கைதிகளையும் தொழிற்சங்க தலைவர்களையும் மனிதத் தன்மையற்றவகையில் ஒடுக்குதல் போன்றவை செய்யப்பட்டன. மேலும் ஜனநாயக, தொழிற்சங்க, மனித உரிமைகள் அனைத்தையும் பறித்து முதலாளித்துவச் சுரண்டலுக்கு எதிராக மக்களிடம் வளரும் வெறுப்பை அடக்குவதற்கு அச்சுறுத்தல், மிரட்டுதல் கொலை செய்தல் போன்றதொரு சூழ்நிலையை உருவாக்கி மேன்மேலும் பாசிச ஏதேச்சதிகாரத்தை வளர்த்துக் கொண்டது. இணையாக, மதவாத உணர்வுகளைத் தூண்டும் திட்டங்களையும் கொண்டுவந்தது. பள்ளிக் கல்வியில் மதத்தை கட்டாயமாக கற்றுக்கொடுக்க வைத்தல் நிர்வாக அதிகாரிகளிடம் மதவாத செயல்பாடுகளை நுழைத்தல், பிற்போக்கு பழைமைவாத ஒட்டொமன் ராஜ்ஜியத்தின் பராம்பரியத்தைப் புதுப்பித்தல் பிறநாட்டு மதவாத சக்திகளுக்கு உதவுதல் (எ.கா. சிரியாவில் ஆசாத் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுவதாகச் சொல்லும் ஓடுகாலிகளுக்கு உதவுதல்) போன்ற நடவடிக்கைகளை எர்டோகன் அரசாங்கம் எடுத்தது. கெசிடாவில் வணிகவளாகம் கட்டுவதுகூட ஒட்டொமான் பாரம்பரியத்தை புதுப்பிப்பதற்கான முயற்சியேயாகும். ஆக, மதம் மற்றும் நிலப்பிரபுத்துவ பாரம்பரியம் என்ற முகத்திரையை அணிந்துகொண்டு மதச்சார்பற்ற ஜனநாயக மதிப்புகளுக்கெதிராக மதவாதத்தை தூண்டி வளர்த்து தாங்கள் நடைமுறைப்படுத்தும் மக்கள் விரோத ஏகபோக முதலாளித்துவ ஆதரவு கொள்கைகளினால் தோன்றும் மக்கள் எதிர்ப்பியக்கத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்வது தான் நோக்கமாகும். அதேசமயம் முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட்டு எழுந்துவிடாமல் அவர்கள் ஒற்றுமையை உடைக்கவும் மதவாதத்தை பயன்படுத்தினார்கள்.

ஆக, ஒருபுறம் காட்டுமிராண்டித்தனமான ஏதேச்சதிகாரமும் மறுபுறம் மதவாதமும் துருக்கி சமுதாயத்தின் மதச்சார்பற்ற ஜனநாயக அடித்தளத்தை அழித்து சாமானிய மக்களை சித்தாந்த கலாச்சார தார்மீக ரீதியாக நிராயுதபாணியாக்க பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம் முதலாளித்துவவாதிகளின் உலகமய–தனியார்மயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அதிகாரத்தை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ள விழைந்தனர். இவை அனைத்தும் சாமானிய துருக்கி மக்களின் பொறுமையை எல்லை மீறி சோதித்துவிட்டது. அதனால்தான், நகரில் எஞ்சியிருந்த ஒரேயொரு பசுமைப்பூங்காவையும் அழித்து வணிக வளாகம் கட்டுகின்ற இச் சம்பவத்திற்கான எதிர்ப்பு மிகப்பெரிய காட்டுத்தீயாகப் பரவி கிட்டத்தட்ட எர்டோகன் அரசாங்கத்தையே அச்சுறுத்தியது. அரசாங்கமும் கேவலமாகப் பின்வாங்கியதன் மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொண்டது.

## 'உலகக் கோப்பை வேண்டாம் எங்களுக்கு கல்வியும் மருத்துவமும்தான் வேண்டும்' – பிரேசில் மக்களின் போராட்டக் குரல்

பிரேசிலிலும் சாபோலோ (Saopaulo) நகரில் பேருந்துக் கட்டண உயர்வை எதிர்த்து அமைதியாக நடைபெற்ற போராட்டத்தின் மீது காவல்துறை தாக்கியதினால் கொதித்தெழுந்த மக்கள் முன்னெப்போதும் கண்டிராத வகையில் தொடர் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடுமுழுவதிலும் பல இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டனர். கட்டண உயர்வைத் திரும்பப்பெறு என்ற கோரிக்கையுடன் அவர்கள் திருப்தியடைந்துவிடவில்லை. இராணுவ, காவல்துறையின் வன்முறைகளை எதிர்த்து நாட்டின் **75%** மக்கள் தொகையினர் வீதிக்கு வந்து போராட்டத்தில் குதித்துவிட்டனர். பெரிய அளவில் மக்கள் இயக்கங்கள் நடைபெற்றதாக கேள்விப்படாத ஒரு நாடான பிரேசிலில், நாட்டுமக்களின் வயதான, இளம் பெண்கள் என அனைவரின் இரத்தநாளங்களிலும் கால்பந்தாட்டத்தின் மீதான பற்று என்ற உணர்வு ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில், வெகு சில நாட்களிலேயே உலக கால்பந்து கோப்பைக்கான சர்வதேச போட்டியும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியும் நடைபெற இருக்கின்ற நாட்டில், "எங்களுக்கு உலகக் கோப்பை வேண்டாம். கல்விக்கும் மருத்துவமனைக்கும் எங்களுக்கு பணம் வேண்டும்", "மக்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள்", "அசௌகரியத்திற்கு மன்னிப்பீர்! பிரேசில் மாறிக்கொண்டிருக்கிறது" போன்ற கோஷங்களை மக்கள் எழுப்புகின்றனர். வணிகம் மற்றும் வியாபாரிகள் அரசியல்வாதிகளிடம் கூட்டு ஊழலையும் சர்வதேச கால்பந்து பேரவை (FIFA)ல் நடைபெறும் ஊழலையும் மக்கள் குறிவைத்து எதிர்க்கத் துவங்கினர். ஏகபோகங்களால் கட்டுப்படுத்தப்படும் ஊடகங்களையும் கொடூரமான காவல்துறையும் பாதுகாப்புப்படையினரையும் எதிர்த்தனர். காவல்துறை அராஜகம் ஏகபோக முதலாளிகளுக்கு ஆதரவான மக்கள் விரோத கொள்கைகள் இவற்றை அவர்கள் எதிர்த்தனர். 1985ல் அப்பட்டமாகவும் பரவலாகவும் ஊழல் மலிந்துவிட்டது என்ற குற்றச்சாட்டினால் பிரேசிலில் ராணுவம் அதிகாரத்தை இழந்தது. அன்றுமுதல் பாராளுமன்ற அரசியல்முறை கடைப்பிடிக்கப்பட்டது 2003ல் லுலா டாசில்வா அரசாங்கம் அமைக்கப்பட்டது. அவருக்குப்பிறகு அதே தொழிலாளர் கட்சியின் தலைவரான தில்மா ரோசெஃப், 2011ல் பதவிக்கு வந்தார். இவரிடம் மக்கள் ஓரளவு எதிர்பார்ப்பை வைத்திருந்தனர். ரோசெஃப் தலைவராக இருக்கும் இக்கட்சியின் உண்மையான வர்க்கக் குணாம்சம் என்ன? அவர்கள் உண்மையான இடதுசாரி வாதத்தை நம்பி கடைப்பிடித்தார்களா, அதிகாரத்தைப் பிடிக்க உண்மையான இடதுசாரி கண்ணோட்டத்துடனும் அணுகுமுறையுடனும் குறிப்பிடத்தக்க மக்கள் இயக்கத்தை நடத்தினார்களா ஆகிய விவரங்கள் எல்லாம் தெளிவாக உலகத்திற்கு தெரியாது. ஆனால் நாம் என்ன தெளிவாகப் பார்க்கமுடிகிறதென்றால் ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திற்குள் தில்மா ரோசெல்ஃப்பும் அவரது கட்சியும் மற்ற

தொடர்ச்சி 6ம் பக்கம்

# முதலாளித்துவ சுரண்டலில் ஒடுக்குமுறை பிரிவினைகள் மக்களை விரக்தி மற்றும் கோபத்தால் பொங்கியெழச் செய்கின்றன

5ம் பக்கம் தொடர்ச்சி

ஒரு பூர்ஷுவா அல்லது குட்டிபூர்ஷுவா கட்சியைப் போலவே, நிலவக்கூடிய முதலாளித்துவ அமைப்பில் ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்வதைத்தவிர அதை மீறி எதுவும் குறிப்பிடத்தக்க வகையில் செய்ய முடியவில்லை. இவர்களின் முற்போக்கு வாக்குறுதிகள் என்னவாகினும், ஏகாதிபத்தியவாதிகளின் நிகழ்ச்சிநிரலான தாராளமயம், தனியார் மயத்தைத்தான் விசுவாசமுடன் அமுலாக்கினார்கள். பொருளாதாரத்தின், அரசாட்சியின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக ஊழலைக் கருதி அதில் ஈடுபடத் துவங்கினார்கள். மக்களின் கவனத்தை திசைதிருப்ப கால்பந்தாட்ட உலகக்கோப்பை போட்டி, மற்றும் ஒலிம்பிக் போட்டி நடத்துகின்றோம் என சில கவர்ச்சிகரமான திட்டங்களை புனைந்தார்கள். இப்போட்டிகளால் ஏராளமான அன்னிய மூலதனம் வரும் ஸ்பான்சர்ஷிப்புகள் கிடைக்கும் சுற்றுலா வளர்ச்சி ஏற்படும் என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால் இப்போட்டிகள் நடத்திய பிற நாடுகளின் அனுபவங்கள் காட்டுவதென்னவெனில் 'நிகழ்ச்சி அமைப்பாளர்கள் உறுதியளித்தது போன்ற பலன்கள் நடைமுறையில் கிடைத்ததாக ஆதாரங்கள் எவையும் இல்லை' என்பதுதான். அதேசமயம் இந்நிகழ்ச்சிகள் தொடர்புடைய வியாபாரத்திற்கும் சுற்றுலாவிற்கும் பாதுகாப்பளிக்கிறோம் என்ற பெயரில் ஏழைகளுக்கு எதிராக குறிப்பாக கறுப்பின மக்களுக்கும் நகர்ப்புற ஏழைகளுக்கும் எதிராக ஒரு போர் தொடுக்கப்பட்டுவிட்டது. அவர்களின் வீடுகள் தொடர்ந்து சோதனைக்கு உள்ளாக்கப்படுவதும் காவல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் ஆக்கிரமிப்பிற்கும் பயன்படுத்துவதற்காக வீட்டைவிட்டு வெளியேற்றப்படுவதும் நடக்கின்றன. அவர்கள் மீது குற்றங்கள் சுமத்துதல் அவர்களை சிறையில் அடைத்தல் பொய்குற்றங்களைச் சுமத்தி கொல்லுதல் ஆகியவையும் நடக்கின்றன. சென்ற பத்தாண்டுகளில் ரியல் எஸ்டேட் யூக வாணிபத்தால் நிலத்தின் வாடகை நகரங்களில் **150%** உயர்ந்தது. ஆனால் பொதுமக்களின் போக்குவரத்துக்காக எந்த முதலீடும் செய்யப்படவில்லை. குடியிருப்புத்திட்டமாக அறிவிக்கப்பட்ட 'எனது வீடு, எனது வாழ்க்கை' என்ற திட்டம் ஏழைகளை நகரத்திற்கு வெளியே எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத, குறிப்பாக மருத்துவம் கல்விக் கூடங்கள் எல்லாம் மிகவும் மோசமான தரத்தில் இருக்கும் இடங்களுக்கு அனுப்பிவிட்டனர். உயர்கல்வியே கொள்ளை இலாபமீட்டும் சூப்பர் மார்க்கெட்டாக ஆகிவிட்டது. இயற்கையாகவே இந்த விலைவாசிக்கெதிரான, காவல்துறை கொடுமைகளுக்கெதிரான போராட்டங்கள் மூலம் இதுவரை அடங்கியிருந்த மக்கள் கோபம் திடுமென வெளிப்படுவதற்கு வழியைக் கண்டுபிடித்துக் கொண்டது. முதலாளிகளுக்கு சேவை செய்யும் தன்னிச்சையான பாணியில் செயல்படும் இடதுசாரி அரசாங்கமும் இந்த மக்கள் இயக்கங்களை விஷக் கொடுக்கைக் கொண்டு நசுக்கியது.

இவ்வெடித்தெழும் போராட்டங்கள் கசப்பான உண்மைகளை வெளிக்கொணர்ந்துவிட்டன. எந்த ஒரு முதலாளித்துவ சமுதாயத்திலும் சுரண்டப்படும் மக்களின் நலன்களைப் பாதுகாக்க, சுரண்டலுக்கு முடிவு கட்டி முன்னேற்றத்தை உருவாக்க ஒருவர், சமரசமற்ற தன்மை கொண்ட ஜனநாயக இயக்கங்களை ஒன்றன்பின் ஒன்றாக நடத்தவேண்டும். இதன் போக்கில் இப்போராட்டத்தை நடத்தும் ஒரு கட்சி அல்லது பல கட்சிகள் இணைந்து தேர்தலின் மூலமாக அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு வந்துவிடலாம். அப்பொழுது ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின், அதிகாரிகளின், சுயநலவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். உழைக்கும் மக்களின் சக்திவாய்ந்த ஜனநாயக இயக்கங்களால் ஆதரிக்கப்படாமல் நீண்ட நாட்களுக்கு அதிகாரத்தில் நிலைக்கமுடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும். எனவே தங்களின் உண்மையான பலம், ஜனநாயக வெகுஜன இயக்கங்களிலிருந்தும் ஜனநாயக ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையிலிருந்தும் தோன்றும் மக்களின் விழிப்புணர்வில் தான் இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். ஆக, மக்கள் நல அரசாங்கம் என்று சொல்லிக்கொள்ளும் அரசாங்கம், ஜனநாயக இயக்கங்களைப் பாதுகாக்க முடியவில்லை என்றால் ஜனநாயக ரீதியில் அமைப்பாகத் திரளுவதன் மூலம் மக்கள் தங்களின் வலிமையை வளர்த்துக் கொள்ள இயலாவிட்டால் ஜனநாயக விழிப்புணர்வை மக்கள் அடையும் வழிகளை உருவாக்க முடியாவிட்டால் ஜனநாயகம் மடிவது மட்டுமல்ல ஆளும் முதலாளித்துவவாதிகளுக்கு முழுமையாக பணிந்து சேவை செய்யவில்லையென்றால் ஆளும் வர்க்கத்தால் அந்த அரசாங்கமே தூக்கியெறியப்படும்.

இந்த வரலாற்றுப் படிப்பினையை எமது கட்சி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பலமுறை வலியுறுத்தியிருக்கிறார். எடுத்துக்காட்டாக **1967**ல் மேற்குவங்கத்தில் முதல்முறையாக தேர்தலில் இடதுசாரி ஜனநாயக ஐக்கியமுன்னணி வெற்றிபெற்று மாநில அரசாங்கத்தை அமைத்தது. அப்பொழுது, அதிகாரம் மற்றும் பதவி சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புகளால் குதூகலமடைந்த சமூக ஜனநாயக கட்சிகளான சிபிஐ, சிபிஐ (மார்க்சிஸ்ட்) போன்றவை அந்த அரசாங்கத்தையும் அதன் நிர்வாகம் காவல்துறை போன்றவற்றையும் பயன்படுத்தி ஒடுக்கப்படும் மக்களுக்கு சொர்க்கத்தை கொண்டுவந்துவிடுவோம் என்று உற்சாகத்துடன் தம்பட்டமடித்தன. ஆனால் அரசாங்கத்தின் ஒவ்வொரு கொள்கையிலும் ஆளும் வர்க்கத்தின் நோக்கம் திட்டம் தலையீடு குறித்து ஒரு வார்த்தை கூட கூறவில்லை. அக்கூட்டணியில் இடம்பெற்றிருந்த எமது கட்சி, தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் படிப்பினைகளைப் பெற்றிருந்ததால் இதுகுறித்து நன்கு அறிந்திருந்தது. எனவே மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டங்களில் காவல்துறை தலையிடக்கூடாது என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு கடைப்பிடிக்கவேண்டும் என வலியுறுத்தியது. கூட்டணி அரசாங்கமும் கூட இதனை ஏற்றுக் கொண்டது. இதனால் ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் வளர்வதற்கு ஊக்கம் கிடைத்தது. இதனைக் கண்டு ஏகபோக முதலாளிகளின் ஆதரவு பெற்ற செய்தி ஊடகங்களும் அதன் துணையுடன் ஒட்டு மொத்த அரசு இயந்திரங்களும் குய்யோ முறையோ எனக் கூச்சலிட்டு இறுதியாக இக்கொள்கையை மிகவும் நியாயமற்ற நெறியற்ற முறையில் அகற்றிவிட்டனர். ஆக மக்கள் நலனுக்காக எனக் கூறிக்கொண்டு அமைக்கப்படும் அரசாங்கமும் கூட ஆளும் முதலாளித்துவ வர்க்க நலனுக்கு சேவை செய்யவில்லையென்றால் அதிகாரத்திலிருந்தே தூக்கியெறியப்பட்டுவிடும் என்ற தோழர் சிப்தாஸ் கோஷின் படிப்பினையை மேற்கூறிய நிகழ்ச்சி நிரூபித்தது.

பிரேசில் சம்பவத்தைப் பார்க்கும்போது தன்னிச்சையான இடதுசாரி பாணியில் செயல்படும் தில்மா ரௌசஃப் அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக நடப்பதில் எந்த சங்கோஜமும் கொண்டிருக்கவில்லை. சொல்லப்போனால் நிலவும் முதலாளித்துவ அமைப்பிற்கும் ஏகபோகங்களுக்கும் சேவை செய்யும் பாதையை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். மக்கள் மீது எல்லையில்லா சுரண்டலை திணித்தார்கள். மக்கள் எதிர்ப்புக் குரலை உயர்த்தியபோது கொடூரமான முறையில் அவர்களை ஒடுக்கினார்கள். துரதிருஷ்டவசமாக ரௌசெஃப்பிற்கும் அவரது அரசாங்கத்திற்கும் அவர்கள் எடுத்த ஒடுக்குமுறை நடவடிக்கை அவர்களுக்கே எதிராகத் திரும்பிவிட்டது. இந்நடவடிக்கை மேலும் எஃகு போன்ற உறுதியுடன் மிகப்பெரிய இயக்கத்தை தோற்றுவித்துவிட்டார்கள். பிரேசில் இதுவரை இப்படிப்பட்ட இயக்கத்தைக் கண்டதுமில்லை, ஆளும் வர்க்கமும் அரசாங்கமும் இதை எதிர்பார்க்கவுமில்லை. 'நாங்கள் முழுமையானதொரு கருத்துப்போரில் உள்ளோம். முடிவு என்னவாக இருக்கும் என எவருக்கும் தெரியாது. ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்திலும் மக்களின் இதயத்தையும் சிந்தனையையும் ஈர்ப்பதற்கு நாங்கள் போராடவேண்டியுள்ளது. இப்போராட்டத்திலிருந்து விலகியிருப்போர் வரலாற்றிலிருந்தும் விடுபட்டு விடுவார்கள்.' என பிரேசில் நிலமற்றோர் இயக்கத்தின் (MST) தலைவர் கூறுகிறார்.

## எகிப்து : பிற்போக்கு இராணுவம் சூட்சமமாக மீண்டும் அதிகாரத்திற்கு வந்துவிட்டது

எகிப்தில் ஜனநாயகத்திற்காக மதசார்பின்மைக்காக சமூகத்தையே ஜனநாயகப்படுத்த வேண்டும் என்ற உரிமைகளுக்காகப் போராடிய மாபெரும் மக்கள் இயக்கம் **2011** துவக்கத்தில் ராணுவப் பின்புலம் கொண்ட ஹொஸ்னி முபாரக்கின் சுரண்டல் ஒடுக்குமுறை ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால் அவ்வியக்கத்தில் சக்திவாய்ந்த புரட்சிகரத் தலைமையில்லாததால் முஸ்லிம் பிரதர்ஹுட் (Muslim Brotherhood) என்ற அடிப்படைவாத அமைப்பு, இராணுவத்தின் ஆதரவுடனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடனும் இயக்கத்தினுள்ளே நுழைந்து இறுதியாக தலைமையிடத்திற்கு வந்துவிட்டது. முறைகேடுகள் அச்சுறுத்தல்கள் மூலம் தேர்தலில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஜுன் **2012**ல் அவ்வியக்கத்தின் தலைவர் மொஹமத் மோர்சி புதிய அரசாங்கத்தை அமைத்தார். அதிகாரத்திற்கு வந்துவிட்ட மோர்சியின் முஸ்லிம் பிரதர் ஹுட் அமைப்பு தனது சொந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தத் துவங்கிவிட்டது. ஒருபுறம் சர்வதேச நிதி நிறுவனமான ஐ.எம்.எஃப். (IMF)ன் கட்டளைப்படி மின்சாரம், உணவுப் பொருள்களுக்கான மானியங்களை வெட்டி முதலாளித்துவத்தின் சுரண்டலை நடத்தியது. மறுபுறம் சுதந்திர சிந்தனை கொண்ட உறுப்பினர்களின் மற்றும் கிறிஸ்துவ சட்டசபை உறுப்பினர்களின் பங்கெடுப்பு இன்றி ஒரு புதிய வரைவு அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தி நாட்டின் மதச்சார்பின்மை சூழ்நிலையைப் பாதித்தது. பேச்சு சுதந்திரத்திற்கும் பெண்கள் சுதந்திரத்திற்கும் சிறுபான்மையினர் உரிமைகளுக்கும் மற்றும் பல்வேறு உரிமைகளுக்கும் தடைகளைப் போட்டது. அதிபரின் ஏதேச்சதிகார அதிகாரத்தை ஏராளமாக உயர்த்திக் கொண்டது. அவரை நீதிமன்ற பரிசீலனைக்கு அப்பாற்பட்டவராக வைத்தது. மக்களின் அதிருப்தி குறைவதற்குப் பதிலாக அதிகரித்து மதச்சார்பின்மையைப் பின்பற்றுபவர்களையும் சுதந்திர சிந்தனையாளர்களையும் கிறிஸ்தவர்களையும் ஒருசேர மோர்சிக்கு எதிரணியினராக்கி அவர்களையும் இஸ்லாமியர்களையும் மோதிக்கொள்ள வைத்ததில் முடிந்தது. பதவியேற்ற ஓராண்டு நிறைவு நாளான ஜுன் **30** அன்று தமராட் (அரேபிய மொழியில் கிளர்ச்சி என்ற பொருள்) இயக்கத்தின் மூலம் மக்களின் கோபம் வெளிப்பட்டது. இவர்களின் கோர்க்கை மனுவில் நாட்டின் **8.4** கோடி மக்களில் **2.2** கோடியினர் கையொப்பமிட்டனர். மோர்சியின் ஆட்சியை இந்த இயக்கம் ஆட்டம் காணவைத்தது. மக்களின் வெறுப்பையும் அக்ரோஷத்தையும் ஏகாதிபத்திய ஆதரவு முதலாளித்துவ அதரவு அரசியல் அதிகார ஆவல் கொண்ட முற்றிலும் ஊழல் மலிந்த எகிப்து இராணுவம் மோர்சிக்கு (முஸ்லிம் பிரதர் ஹுட்டுக்கு) எதிரான அலையைப் பயன்படுத்திக்கொண்டு அதிகாரத்திற்கு வந்துவிட்டது. மோர்சியை அகற்றி சிறையில் அடைத்து முஸ்லிம் பிரதர்ஹுட் அமைப்பினரின் மீதும் ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டது. இவ்வாறாக, நாடு சுதந்திர மடைந்தது முதற்கொண்டு ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் ஆதரவாக மக்களை கொடூரமாக ஆண்டுவந்த இராணுவம், தந்திரமாக சிவிலியன் முகமூடி அணிந்து ஆட்சிக்கு வந்துவிட்டது. எந்த இலக்கிற்காக எகிப்து மக்கள் மாபெரும் சக்தியுடனும் உறுதியுடனும் துணிவுடனும் தஹ்ரிர் சதுக்கத்திலும் பல இடங்களிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்ட இயக்கத்தைக் கட்டினார்களோ அந்த இலக்கை குழப்பம் மற்றும் தோல்விகள் என்ற சம்பவங்களினூடே தொலைத்துவிட்டார்கள். சென்ற ஆண்டு ஜுன் **30**ல் நடந்த தமராட் இயக்கமானது அதற்கு முந்தைய ஆண்டு **2011**ல் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தை விட சற்றும் வலிமையில் குறைந்ததல்ல. ஆனால் அப்படியிருந்தும் இவ்வியக்கம் பிற்போக்கு இராணுவத்தை அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலிருந்து தடுக்க முடியவில்லை. இராணுவ ஆட்சி நிச்சயமாக பூர்ஷுவா வர்க்கச் சுரண்டல் ஆட்சியை மேலும் உக்கிரமாக நடத்தப் போகிறது. ஆக, முக்கியமான கேள்வி, ஏன் இவ்வாறு நடந்துவிட்டது என்பதுதானாகும்.

## சிறப்புவாய்ந்த மக்களின் போராட்ட இயக்கங்களும் தங்களின் தலைமையைப் பற்றிய கேள்வியும் இருக்கின்றன

துருக்கி, பிரேசில், எகிப்து ஆகிய நாடுகளில் நடைபெற்றுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இயக்கங்கள் மக்கள் சக்தியின் முன் அதிகாரசக்திகள் எப்படி தவிடுபொடியாகிவிடும் என்பதை மீண்டும் காட்டிவிட்டன. அதேபோன்று தேர்தலின் மூலம்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# தேர்தல்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு எந்த தீர்வும் அளிப்பதில்லை

4ம் பக்கம் தொடர்ச்சி

ஜனநாயக உரிமைகள் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும், அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகள் மீதான தடைகள் நீக்கப்படவேண்டும், ஜனநாயக, முற்போக்கு சக்திகள் வளர்வதற்கான குறைந்தபட்ச சூழல் உருவாக்கப்பட வேண்டும். கதவு திறந்திருக்கவில்லை என்பது உண்மைதான். ஒவ்வொரு அங்குலம் முன்னேறுவதற்கும் கடுமையாக உயிரைக்கொடுத்துப் போராடவேண்டும். விடாப்பிடியான சித்தாந்த பிரச்சாரம், நாட்டில், அதன் மக்களை பிற்போக்குவாதம் எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கண்டறிதல், வெகுஜனங்களிடமிருந்து தீரமிக்கப் போராளிகளை தேடிப்பிடிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். இது உறுதியான சுரண்டலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான போராட்டம். எனவே விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், படிப்பறிவின்மை, ஊழல், மின்சார நெருக்கடி, குடியிருக்க வீடு இல்லாமை, மருத்துவ வசதியின்மை, வாழ்க்கைக்குப் பாதுகாப்பின்மை, ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் என இது போன்ற ஆயிரத்தோரு எரியும் பிரச்சினைகளின் மீது ஜனநாயக இயக்கங்களை கட்டியெழுப்பி, வளர்த்தெடுத்து திறம்பட அடுத்தடுத்து நடத்திச் செல்ல வேண்டும். அதற்கு சுரண்டப்படும், ஒடுக்கப்படும் அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைக்க வேண்டும். இத்தகைய இயக்கங்கள் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கெங்கும் நடத்தப்பட்டு பின் அவை நாடுதழுவிய பிரம்மாண்டமான வெகுஜன இயக்கமாக உருவெடுக்கவைக்க வேண்டும். தற்போதைய சூழல் சாதகமானதுதான். குறைந்தபட்சம் ராணுவம் நேரடியாக அதிகாரத்தில் இல்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் பதவியேற்றுள்ளது. எனவே இந்த தருணத்தில் ஒடுக்கப்படும் அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து வலுவான நீடித்த வெகுஜன இயக்கங்களைக் கட்டெயெழுப்ப அனைத்து வகைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும். ஆனால் மக்களை வழிநடத்துவதற்கு சரியான சித்தாந்தத்துடன் கூடிய சரியான தலைமை இல்லாமல் இத்தகைய போராட்டங்கள் அவை விரும்பும் இலக்கான வெற்றியை அடைய முடியாது. இன்று மார்க்சிசம்–லெனினிசமே ஒடுக்கப்பட்ட மக்களின் உன்னதமான சித்தாந்தம் ஆகும். மக்களுடைய போராட்டத்தில் உண்மையான மார்க்சிய–லெனினிச புரட்சிகர தலைமையே திசை வழியைக் காட்ட முடியும். எனவே மக்களுக்குத் தலைமை ஏற்க அத்தகைய புரட்சிகர வலுவான தலைமை பாகிஸ்தான் மண்ணிற்குத் தேவை. இந்த வரலாற்றுத் தேவையை பாகிஸ்தான் மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். சுரண்டல்–ஊழல்–தீவிரவாதம் என்ற சிக்கலில் இருந்தும் ஆளும் வர்க்கங்கள் அவர்களது ராணுவம் பழமைவாதிகள்–அரசியல்வாதிகளின் கூட்டிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்வதற்கும், நாட்டில் ஜனநாயக உரிமைகள் மீண்டும் மலரச்செய்வதற்கும், தோற்றுப்போய் விட்டதென்று அழைக்கப்படும் பாகிஸ்தான் திவாலாவதிலிருந்து மீட்பதற்கும் இந்த உண்மையைப் புரிந்து அதன்படி நடப்பதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

# குற்றம் நிரூபணமானவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலோ...

1ம் பக்கம் தொடர்ச்சி

தெளிவு. இது ஜனநாயகத்தின் மீதும் மக்களுடைய ஜனநாயக உரிமைகள் மீதும் நேரடியாக தொடுக்கப்படும் தாக்குதலாகும். எனவே, முதலாளித்துவ சூழ்ச்சிகள், மற்றும் நயவஞ்சக செயல்களுக்கு எதிராக சக்திவாய்ந்த வெகுஜன இயக்கங்களை வளர்த்தெடுக்காமல் வெறும் சட்டரீதியான விதிகள் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் மூலம் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண இயலாது.

எமது கட்சியின் மத்திய கமிட்டி இரண்டாவது முக்கியமான கேள்வி ஒன்றையும் இது தொடர்பாக எழுப்ப விரும்புகிறது. பாடுபடும் மக்களின் நியாயமான ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளோரை தேர்தல் களத்திலிருந்து ஒழித்துக்கட்டும் கெட்ட எண்ணத்தோடு ஆளும் முதலாளித்துவ கட்சிகள் அரசியல்மயமாக்கப்பட்ட அரசின் வழக்காடல் துறையை (Prosecution) தம்மிஷ்டத்திற்கு வளைப்பதால் நீதி புறக்கணிக்கப்படும் அல்லது அநீதி இழைக்கப்படும் அபாயம் ஏற்படுகிறது. பல சமயங்கள் மிகத் தவறாகவும் அநியாயமாகவும் வழங்கப்பட்ட தீர்ப்புகள் மேல்முறையீடுகளில் ரத்து செய்யப்பட்டுள்ளன அல்லது மாற்றியமைக்கப்பட்டுள்ளன. எனவே, சட்டமன்றம், பாராளுமன்றங்களில் உண்மையான குற்றவாளிகள் நுழைவதை தடுப்பதற்கும் இம்மன்றங்களின் உறுப்பினர் அந்தஸ்தை அனுபவிப்பதிலிருந்து அவர்களை தடுப்பதற்கும் சரியான தீர்வை நாம் தேடுகின்றபோது மேற்குறிப்பிட்ட பொருத்தமான உண்மை நிகழ்வுகளையும் யதார்த்தத்தையும் பார்க்கத் தவறக்கூடாது.

இத்தகைய சூழ்நிலையில், நீதியை நிலைநாட்ட வேண்டுமானால், இத்தகைய வழக்குகளில் முடிவெடுக்கும்போது ஒட்டுமொத்த நீதியியல் நடைமுறையை முழுமையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட அனுமதிக்க வேண்டும் என எமது கட்சியின் மத்திய கமிட்டி ஆணித்தரமான கருதுகிறது. எத்தகைய சூழ்நிலையிலும் நீதியியல் நடைமுறை குறுக்கப்படக்கூடாது அந்நடைமுறையின் முக்கியமான கூறுகள் கைவிடப்படக்கூடாது. முதல் நோக்கு வழக்கு (Prima facie case) என்பது நிபந்தனைத் தகுதியாக இருக்கையில், அடிப்படை உரிமையாகிய மேல்முறையீட்டுக்கான உரிமை யாருக்கும் எப்போதும் மறுக்கப்படக்கூடாது என்றும் நீதி பரிபாலனத்தின் உண்மையான ஆன்மாவிற்கிணங்க இத்தகைய மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, வழக்கில் இறுதித்தீர்ப்பு வரும் வரையில் மேல்முறையீடு செய்தவரை எவ்வகையிலும் தண்டிக்கக்கூடாது என்றும் நாங்கள் கருதுகிறோம். மாறாக, இத்தகைய மேல்முறையீடுகளை குறிப்பாக பதவியிலுள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேல்முறையீடுகளை எவ்வளவு விரைந்து விசாரித்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்க வேண்டும் என்றும் நாங்கள் அழுத்தமாக தெரிவிக்கிறோம்.

போலீஸ் காவலிலோ சிறையிலோ இருக்கின்ற நபர்களை தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடை செய்து உச்சநீதிமன்றம் கடந்த **11.7.2013** அன்று பிறப்பித்த தீர்ப்பையும் எமது கட்சியின் மத்திய கமிட்டி ஊன்றி கவனிக்கிறது. ஜனநாயக நாடுகள் அனைத்திலும், பாராளுமன்ற ஜனநாயகம் நிறுவப்பட்ட நாள் முதலாக விசாரணைக்குட்படுத்தப்பட்ட கைதிகள் அனைவருக்கும், அவர்கள் ஜெயிலில் இருந்தாலும் சரி, பெயிலில் இருந்தாலும் சரி, தேர்தலில் போட்டியிடுவதற்கு தங்குதடையற்ற உரிமை உண்டு என்பதையும் மத்தியக்கமிட்டி வலியுறுத்துகிறது. ஏனெனில், குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒவ்வொருவரும் நிரபராதியாகத்தான் கருதப்படுவார் என்பது நீதியியல் பரிபாலணத்தின் அடிப்படை கோட்பாடாகும்.

முதலாளித்துவ அரசியல் முற்றிலும் சீரழிந்து அதலபாதாளத்தில் விழுந்துவிட்ட இன்றைய காலத்தில், மக்களது நியாயமான கோரிக்கைகளுக்காக போராட்ட இயக்கங்கள் கட்டிவளர்ப்பதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளவர்கள் தேர்தல் களத்திலிறங்குவதை தடைசெய்ய எத்தகைய இழிவான செயல்களில் ஈடுபட்டாகிலும் ஆளும் கட்சிகள் முற்படும் உண்மையான அபாயம் இருப்பதை நாம் மறந்திடலாகாது. எனவே, இத்தகைய சூழ்நிலையில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள இத்தீர்ப்பானது தேவையற்றதும், தன்னிச்சையானதும், தனிநபரின் அடிப்படை உரிமை, தனிநபர் சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றின் மீது தொடுக்கப்பட்ட நேரடித்தாக்குதல் என்றும் எமது கட்சியின் மத்தியக்கமிட்டி திடமாகக்கருதுகிறது. எனவே, இது தொடர்பாக உச்சநீதிமன்றம் நிதானமாகவும் அமைதியாகவும் பரிசீலனை செய்து இவ்வுத்தரவை உடனடியாக ரத்து செய்யவேண்டும் என்று நாங்கள் வேண்டுகிறோம்.

# என் எல் சி பங்கு விற்பனைக்கெதிரான...

2ம் பக்கம் தொடர்ச்சி

பொறியாளர்கள் அதிகாரிகள் முதலியோரின் ஒன்றிணைந்த உழைப்பு சக்தி பலத்தால், தொடர் உழைப்பினால் என்எல்சி உருவானது. ஒட்டுமொத்த உழைப்புசக்தியில் உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் வருமானம், அவர்களையே அடக்கி ஒடுக்கவும், மக்களின் நலனுக்கும் விருப்பத்துக்கும் எதிராக செலவிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் பொதுத்துறை உருவானபோது, இடதுசாரி என்று தங்களை அழைத்துக்கொள்ளும் பல்வேறு அமைப்புகள் அதை “சோசலிச” நடவடிக்கை என்று வர்ணித்தார்கள். ஆனால் அரசு மூலதனம் என்பது, லாபநோக்கு முதலாளித்துவ உற்பத்தியின் கீழ், முதலாளித்துவ அரசமைப்பு முறையில் முதலாளித்துவத்துக்கே சேவை செய்யும், அது தொழிலாளர்களுக்கு எவ்வித விடிவையும் தராது என்று பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவரும், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகத் தலைவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் ஆய்வு செய்து காட்டினார். அதற்கு கட்டியம் கூறும் நிகழ்வுத் தொடர்களில் ஒன்றே இப்பங்கு விற்பனையாகும். மேலும் உழைப்பைச் சுரண்டும் மூலதனம் – உபரி உழைப்பை (லாபம்)யும், மீண்டும் மூலதனமாகப் பெருக்கி, முன்னைவிட பலத்துடன் அதிக எண்ணிக்கையிலானத் தொழிலாளர்களை கூடுதலாகச் சுரண்டி, ஒடுக்கும் என்பதை பாட்டாளி வர்க்கத்தின் தத்துவப் பேராசான், விஞ்ஞான சோசலிசத்தின் சிருஷ்டி கர்த்தா மாமேதை மார்க்ஸ் **19**ஆம் நூற்றாண்டிலேயே நிலை நிறுத்தியுள்ளதையையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். எனவே ஒரு வர்க்க சமூக அமைப்பில் அரசு மற்றும் அரசின் நிறுவனங்கள் அனைத்தும் ஆளும் வர்க்கத்தின் இயந்திரங்களே ஆகும். நம் நாட்டில் இவை முதலாளித்துவ அரசு இயந்திரமும் பொதுத்துறை நிறுவனங்கள் கூட முதலாளித்துவ சுரண்டல் நிறுவனங்களுமேயாகும்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் நிலைபாடுகளும், முன்வைத்த பல்வேறு கருத்துக்களும் ஒன்றுபட்ட போராட்டத்தின் மத்தியில் சமரசவாதத்தையும் ஊசலாட்டத்தையும் ஏற்படுத்தின. பங்குகளை விற்பனை செய்யக் கூடாது என்ற நிலைபாட்டிலிருந்து தமிழ்நாடு அரசுக்கு பங்குகள் விற்பது என்ற முன்மொழிதல் தொழிலாளர்களையும் மக்களையும் குழப்பியது. பங்குகளை விற்பனை செய்வது என்பதே உலகமய – தாராளமய – தனியார்மய கொள்கைகளின் வெளிப்பாடு என்பதை மறைத்தது. இதுவும் தனியார் மயத்தின் அங்கமே என்பதை இக்கருத்துக்கள் மூடி மறைத்தன. இக்குழப்பங்கள் காரணமாக வீரம் செறிந்த ஒன்றுபட்ட தொழிலாளர்கள் போராட்டம், மக்களின் ஆதரவை கணிசமாகப் பெற்ற நிலையிலும், உரிய இலக்கை எட்டாமலேயே முடிவுக்கு வந்தது. முதலாளித்துவ அரசியலில், அவர்களின் பிரதிநிதிகளான அரசியல் அமைப்புகள், சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்ட குழப்பங்களால் இத்தகைய முடிவை ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

# ஆந்திரப்பிரதேச மாநிலத்தை பிரிக்கும்...

1ம் பக்கம் தொடர்ச்சி

ஆளும் முதலாளித்துவத்தின் இந்த விஷச் சுழியில் வீழ்ந்துவிட வேண்டாம் எனவும் முழுக்க முழுக்க பிரிவினைவாத ஏமாற்று சதிதிட்டத்திற்கு பலியாக வேண்டாம் எனவும் தங்கள் வாழ்வை சூறையாடும் பிரச்சினைகளிலிருந்து நிவாரணம் பெற ராயலசீமா மற்றும் கடலோர ஆந்திரா மக்களுடன் இணைந்து சக்திவாய்ந்த ஒன்றுபட்ட ஜனநாயக மக்கள் போராட்டத்தை நடத்தும் பாதையை தேர்ந்தெடுக்குமாறும் எமது கட்சியின் மத்தியக் கமிட்டி ஆந்திரப்பிரதேசத்தின் தெலுங்கானா பகுதி மக்களுக்கு நேசத்துடன் வேண்டுகோள் விடுக்கின்றது. மாநிலத்தைப் பிரிக்கும் பாதகமான இம் முடிவை உடனடி யாக கைவிடவேண்டும் என்று எமது கட்சியின் மத்தியக் கமிட்டி கோருவதுடன் இதே கோரிக்கையை ஆந்திரப்பிரதேச மக்களும் நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒரே குரலில் எழுப்ப வேண்டும் எனவும் கோருகிறது.

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 27th August 2013

புரட்சி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# தன்னெழுச்சியாக வெடித்தெழும் போராட்டங்களும் புரட்சியும் ஒன்றல்ல

6ம் பக்கம் தொடர்ச்சி

மக்கள் தங்களின் முக்கியக் கோரிக்கைகளை ஆளும் வர்க்கத்திடமிருந்து பெற்றுவிடமுடியாது என்பதையும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்பதையும் காட்டுகிறது. சில குறைந்தபட்ச கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமென்றால் கூட மக்கள் நேரடியாகக் களத்தில் இறங்கி போராட வேண்டும் என்பதையும் சமீபத்திய இப்போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும் இப்போராட்டங்கள் சில முக்கியமான கேள்விகளை இந்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது. பொதுவாக அனைவருக்கும் எழுப்பியுள்ளது. இம்மூன்று நாடுகளும் தத்தமது முதலாளித்துவ வர்க்கங்களால் ஆளப்படுகின்றன. மடிந்து அழுகிவரும், ஆழ்ந்த நெருக்கடியில் சிக்கியுள்ள உலக முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பின் ஓர் அங்கமாக இருப்பதால் இந்நாடுகளின் ஆளும் முதலாளித்துவ வர்க்கங்களும் நெருக்கடியின் அடையாளங்களைக் கொண்டுள்ளன. இதன் விளைவாக மக்களின் அதிருப்தியும் கோபமும் பெருகி தம்மை வெளிப்படுத்த வழிதேட ஆரம்பித்தன. சமீபத்திய மாபெரும் மக்கள் இயக்கங்கள் இதன் வெளிப்பாடுகளேயாகும். ஆனால் துரதிருஷ்டவசமாக இவ்வியக்கங்கள் எல்லாம் சுரண்டல் ஒடுக்குமுறை ஊழலற்ற, பொருளாதார இன, மத இன்னபிற பாகுபாடுகளற்ற அமைப்புமுறை வேண்டும் என்ற மக்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கான உடனடி வாய்ப்பைக் காட்டவில்லை மாறாக எகிப்தில் நடந்ததுபோல் மாபெரும் இயக்கம்கூட பிற்போக்கு சக்தி புதிய முகத்திரையை அணிந்து மீண்டும் ஆட்சிக்குவருவதைத் தடுக்க முடியவில்லை. இது ஏன் இவ்வாறு நடந்தது, இவ்வாறு நடக்காமல் இருக்க என்ன வழி என ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டிய அவசியத்தைத்தான் இந்நிகழ்ச்சிகள் உணர்த்துகின்றன.

இது குறித்து தோழர் சிப்தாஸ் கோஷின் மேலும் சில படிப்பினைகளை நாம் நினைவுகூற விரும்புகிறோம். உயரிய பொக்கிஷமான மார்க்சிய லெனினிய அறிவையும் ஆய்வுமுறைகளையும் உள்வாங்கி ஒருங்கிணைத்து அதில் மேலும் ஆழ்ந்த ஞானத்தையும் தொலைநோக்குப் பார்வையையும் அவர் வளர்த்தெடுத்தார். அதன்மூலம் சுரண்டப்படும் உழைக்கும் மக்களுக்கு போராட்டங்களில் சந்திக்கும் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு எச்சரிக்கையையும் வழிகாட்டுதலையும் வழங்கினார். சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் மீண்டும் மீண்டும் உட்படுத்தப்படும் மக்கள் தங்களின் கஷ்டங்களும் பொறுமையும் எல்லைமீறும்போது போராட்டங்களில் வெடித்தெழுவார்கள் என அவர் குறிப்பிட்டார். கோபத்தால் ஆக்ரோஷமான போராட்டக் களத்தில் தெருக்களில் இறங்கி குண்டாந்தடிகளையும் துப்பாக்கிக் குண்டுகளையும் கூடச் சந்திப்பார்கள். ஆனால் அத்தகைய போராட்டங்களுக்கும் கூட ஒரு தலைமைப்பாத்திரம் தேவை என தோழர் சிப்தாஸ் கோஷ் சுட்டிக்காட்டினார். மக்களின் ஆக்ரோஷமான போராட்டத்தின் காரணத்துடன் அத்தலைமை நின்றுவிடக்கூடாது. அல்லது மக்கள் துணிச்சலாக போராட்டத்தில் குதிக்கும்போது எவ்வாறு அவர்களை ஓர் அமைப்பாகத் திரட்ட வேண்டும், எவ்வாறு மக்களை கட்டுப்பாட்டுடன் கூடிய நீண்ட நெடிய போருக்குத் தயாராக நடத்த வல்லதொரு ராணுவ அமைப்பைப்போன்று அவர்களை அணிதிரட்டவேண்டும் என அத்தலைமை அறிந்திருக்க வேண்டும். வெறுமனே தற்செயலான கோபவெளிப்பாடாக போராட்டங்களை நடத்துவதற்குப்பதிலாக அதனை போர்க்குணமிக்க தளர்வற்ற தொடர் போராட்டமாக மாற்றத் தெரிந்திருக்கவேண்டும். தற்செயலாக நடக்கும் ஆக்ரோஷமான போராட்ட அலைகள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அவை புரட்சியாகாது என தோழர் சிப்தாஸ் கோஷ் தெளிவாக விளக்கியுள்ளார். வெறும் கொந்தளிப்புகள் தானாகவே புரட்சியாக ஆகாது. புரட்சி என்றால் அது, தற்போது நிலவும் அரசு அமைப்பை முற்றிலும் புதியதாக புரட்சிகரமாக மாற்றுவதாகும். எடுத்துக்காட்டாக, நிலவக்கூடிய முதலாளித்துவ பொருளாதார சமூக அரசியல் கட்டமைப்பை வேருடன் பிடிங்கியெறிந்து அதனிடத்தே வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் துறைகளிலும் சோஷலிச அரசை அமைப்பது எனப் பெருளாகும். அத்தகைய புரட்சிகரமாற்றம், குவிந்திருக்கும் குறைகளும் கோபமும் தன்னெழுச்சியாக வெடிக்கும் மக்கள் போராட்டத்தின் மூலம் வந்துவிடாது. வரலாறு இதற்குச் சான்று பகரவில்லை, அது விஞ்ஞானமும் அல்ல. இத்தகைய போராட்டங்கள், போர்க்குணமிக்கதாக இருந்தாலும் கூட போராட்டக்களத்திலிருந்து மக்களைத் தேர்தல் அரசியலுக்குள்தான் அதிகபட்சம் இழுத்துச் செல்லும். இத்தகைய போராட்டங்கள் இறுதியில் புரட்சிகர இயக்கத்தின் தயாரிப்பை தவறாக வழிநடத்தி புரட்சிக்கு தடையாகவே மாறிவிடுகிறது. முதலாளித்துவமும் முன்பைப்போலவே, சுரண்டல் வேலையின்மை விலைவாசி உயர்வு, நிலத்திலிருந்து இடம்பெயர்ப்பு, வாழ்வாதாரங்களின் இழப்பு என அனைத்துப் பிரச்சினைகளுடன் அப்படியே இருக்கும். ஆகவே கொந்தளிப்பு ஆர்ப்பாட்டமும் புரட்சியும் ஒன்றல்ல. புரட்சியை நடத்த ஒரு தீர்மானகரமான தெளிவான அரசியல் இலக்கை அடிப்படையாகக் கொண்டு தம்மை ஸ்தாபகப்படுத்திக் கொள்வதுதான் உழைக்கும் மக்களின் தேவையாகும். இதன் பொருள், புரட்சி என்ற ஒரே ஒரு தேவைக்காக அரசியல்ரீதியாக விழிப்புணர்வுபெற்ற மக்களின் நீண்டநெடிய போராட்டத்தை நடத்தத் தகுந்ததாக அந்த ஸ்தாபனம் கட்டப்படவேண்டும். போராட்ட இயக்கத்தில் புரட்சிகர தலைமையை உருவாக்கி நிலைபெறச் செய்யாமல் அடைய முடியாது.

எனவேதான் தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார்: "தொழிலாளர்களின் விவசாயிகளின் அனைத்து சுரண்டப்படும் மக்களின் வேதனைக் குமுறலிலிருந்து புரட்சி என்பது மீண்டும் மீண்டும் அலைக்குப்பின் அலை என முன்வந்து வெடித்தெழும். சமுதாயத்தில் முரண்பாடு மேலும் ஆழமாகி பல முறை கூர்மையாகி இன்றைய சமுதாய ஒழுங்கில் புரட்சிகர மாற்றத்தைக் கோரும். புரட்சி தேவையென நமது சிந்தனையைப்பற்றிக்கொள்ளும், மனித குலத்தை வேண்டும். இருப்பினும் புரட்சி என்பது வாராது, மீண்டும் மீண்டும் பின்வாங்கும், தடம் மாறிப்போகும். இதன்மூலம் (அவ்விடத்தில்) பிற்போக்கு சக்தி மீண்டும் மீண்டும் பலம் பெறும் புரட்சியை தலைமைதாங்கும் அளவிற்கு போதிய வலிமை கொண்ட புரட்சிகரக்கட்சி தோன்றும் வரை புரட்சி விடியலைப்பார்க்காது. ஒன்று தெளிவாகட்டும், வெறுமனே புரட்சியை விரும்புவது புரட்சிகர விழிப்புணர்வல்ல அதே போன்றே, தொழிலாளர்களைப்பற்றி, பாட்டாளிகளைப்பற்றி சிந்திப்பதும் பாட்டாளிவர்க்க விழிப்புணர்வல்ல. சரியான பாட்டாளிவர்க்க விழிப்புணர்வு என்பது சரியான பாட்டாளிவர்க்கக் கட்சி விழிப்புணர்வாகும். இதன் பொருள், உங்களால் உண்மையான புரட்சிகரக் கட்சியை கண்டறிந்து ஏற்றுக்கொள்ள முடிந்திருக்கிறதா என்பதாகும்."

சிரியா எகிப்து பிரேசில் நாட்டுமக்களின் இயக்கங்களின் முன் இருக்கின்ற 'புரட்சிகரத் தலைமையை வளர்த்தெடுத்தல்' என்ற கேள்வி இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது. தங்களை வழிநடத்த இத்தகைய தலைமை இருப்பதை இத்தகைய எந்தப் போராட்டமும் காண்பிக்கவில்லை இதனால், மக்களின் போராட்டத்தாலும் மாபெரும் தியாகத்தாலும் விளைந்த சூழ்நிலையை ஊழல் மலிந்த பிற்போக்கு இராணுவம் நுழைந்து தட்டிப்பறித்துக் கொள்வதை எகிப்து மக்கள் பார்க்கநேரிடும். இதே காரணத்தினால் துருக்கிய மக்களும் தங்கள் சமுதாயத்தில் இருக்கும் கொஞ்சநஞ்ச மதச்சார்பற்ற ஜனநாயக மதிப்புளையும் தாக்கி அகற்றக்கூடிய கொடிய பாசிசப் போக்கு வளர்வதை எதிர்த்து மீண்டும் மீண்டும் போராடவேண்டிவரும். போராட்ட இயக்கத்தில் புரட்சிகரத் தலைமை உருவாகவேண்டிய பிரச்சினைக்குத் தீர்வுகாண இதே காரணத்தினால் பிரேசிலிய மக்களும் வரலாற்றிலிருந்து விடுபட்டு விடாமல் இருக்க, காற்பந்து ஆட்டத்திற்காக மட்டுமல்ல கல்வி சுகாதாரம் போன்ற வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்காகவும் 'இதயங்களும் உள்ளங்களும்' ஒன்று சேரப் போராடவேண்டிய தேவையை மீண்டும் மீண்டும் உணர்வார்கள். போராடும் மக்கள் தங்கள் கோரிக்கைகளை எப்படி வென்றெடுக்கிறார்கள் என உலக மக்கள் அவர்களிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது போராட்டத்தில் இதுபோன்ற பின்னடைவுகளைக் கண்ணுறுவார்கள். உண்மையான மாற்றம், முன்னேற்றம் சுரண்டலிலிருந்து விடுதலை இவை வேண்டுமானால் மக்களின் இயக்கங்கள் மார்க்சிச – லெனினிச அடிப்படையில் ஒரு புரட்சிகரத் தலைமையை ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை வளர்க்க வேண்டும் என்ற தோழர் சிப்தாஸ் கோஷின் அறிவுரை எவ்வளவு மிகச் சரியானது என இவையனைத்தும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்றன. துருக்கி–பிரேசில்–எகிப்து மக்கள் முன்பு இருக்கும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய தலையாய கேள்வி இதுதானாகும்.

## இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் சேர்ந்து பிரஸ்ஸெல்சில் நடத்திய சர்வதேசிய கருத்தரங்கம்

**அகில இந்திய யுடியுசியின் துணைத் தலைவர் தோழர் சி கே லூகோஸ் பங்கேற்பு**



'வேலை வாய்ப்பும் சமூக கொள்கை'யும் எனும் தலைப்பில் பெல்ஜியம் தலைநகர் பிரஸெல்ஸில் இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் சேர்ந்து நடத்திய 6வது சர்வதேசிய கருத்தரங்கு ஜுன் 24, 25, 2013ல் நடைபெற்றது.

'சமூக பாதுகாப்பு' என்பது இக்கருத்தரங்கில் முக்கிய விவாதப் பொருளாகும். இந்திய தொழிலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களில் அகில இந்திய யுடியுசியின் துணைத் தலைவரும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் மத்தியக் கமிட்டி உறுப்பினருமான தோழர் சி.கே. லூகோஸ் அவர்களும் ஒருவராவார். ஏஐடியுசி, சிஐடியு, பிஎம்எஸ் ஆகியவற்றின் தலைவர்களும் பங்கேற்றனர்.

தொழிலதிபர்கள் சார்பாக 6 பிரதிநிதிகளும் இந்திய அரசின் தொழிலாளர் துறை சார்பாக 4 அதிகாரிகளும் பங்கேற்றனர். ஐரோப்பிய கமிஷன், ஐரோப்பிய தொழிலாளர்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து மொத்தம் 80 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in